
# அரசு ஊழியர்


தமிழ்நாடு அரசு ஊழியர் சங்கத்தின் மாத இதழ்

ARASU OOZHIYAR Tamil Nadu Government Employees Association's Monthly

ஆசிரியர்: மு.பாஸ்கரன்

| May 2025 | Volume 46 | Issue 05 | 36 Pages | Price Rs.20.00 |
|---|---|---|---|---|
| மே 2025 | மலர் 46 | இதழ் 05 | 36 பக்கம் | விலை ரூ.20.00 |







# மாவட்ட தலைநகர்
# ஜாக்டோ - ஜியோ பேரணி - 22.04.2025


கோவை


திருச்சி


ஈரோடு


கிருஷ்ணகிரி


சென்னை


விருதுநகர்


இராமநாதபுரம்


திருநெல்வேலி


தருமபுரி


நாமக்கல்


மதுரை


தூத்துக்குடி

அரசு ஊழியர்

மாத இதழ்

ARASU OOZHIYAR

Tamil Nadu Government Employees Association's Monthly

2025 மே

மலர்:46 இதழ்:5

தமிழ்நாடு அரசு ஊழியர் சங்கத்திற்காக

அச்சிட்டு வெளியிடுபவர்: மு.அன்பரசு

ஆசிரியர்: மு.பாஸ்கரன்

ஆசிரியர் குழு:

மு.பாஸ்கரன், மு.சீனிவாசன், சா.டானியல் ஜெயசிங், தெ.வாசுகி, வெ.சோமசுந்தரம், வே.விஜயகுமரன், செ.பிரகாஷ், ச.தினேஷ், இ.மைக்கேல் லில்லிபுஷ்பம்

இதழ் வடிவமைப்பு: ஆர்.காளத்தி

9677003178

முகவரி:

பழைய எண். 48

புதிய எண் 46, தேரடித் தெரு

திருவல்லிக்கேணி, சென்னை - 600 005.

மின்னஞ்சல் : arasuoozhiyar@gmail.com

அச்சகம்:

சென்னை ஆப்செட் பிரிண்டர்ஸ்,

19/1 & 21/2, கிட்டாபாத் கான் பகதூர் தெரு,

எல்லீஸ் ரோடு, அண்ணாசாலை,

சென்னை - 600002

ஆண்டுச் சந்தா : ரூ.200

தனி இதழ் : ரூ.20

இந்த இதழ் குறித்த தங்களின் மேலான கருத்துக்கள் விமர்சனாங்கள் கதைகள், கட்டுரைகள், கவிதைகளை மேற்கண்ட முகவரிக்கு, மின்னஞ்சலுக்கு அனுப்பி வைக்கவும். தகுதியானவை பரிசீலிக்கப்பட்டு அரசு ஊழியர் இதழில் வெளியிடப்படும்.

இதழுக்கு அனுப்பும் கதைகள் கவிதைகள், கட்டுரைகள், கருத்துக்கள் விமர்சனங்களை பிரசுரிக்கவும், நிராகரிக்கவும், சுருக்கி வெளியிடவும் ஆசிரியர் குழுவிற்கு முழு உரிமை உண்டு.

# உள்ளடக்கம்...

1. **அகில இந்திய ஒருநாள் வேலைநிறுத்தம்... மைனாரிட்டி ஒன்றிய அரசுக்கு... எச்சரிக்கையாக அமையட்டும்!**
*தலையங்கம்*....4
2. **தமிழக அரசு ஊழியர் வரலாற்றில் தமிழ்நாடு அரசு ஊழியர் சங்கம் 42 ஆம் அமைப்புதினம் எழுச்சியாக கொண்டாடுவோம்**
*பொதுச் செயலாளர் மேசையிலிருந்து*....5
3. **அகில இந்திய வேலை நிறுத்தம் - 20.05.2025**....14
4. **மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் 110 விதியின் கீழ் வெளியிட்ட அறிவிப்புகள்- 28.04.2025**....17
5. **ஜாக்டோ - ஜியோ முறையீடு**....19
6. **ஒப்பந்த முறை என்ற நவீன சுரண்டலை தமிழக அரசு கைவிட வேண்டும்**....21
7. **வாசகர் கடிதம்**....23
8. **மே 11: சிப்பாய் புரட்சி தின நினைவலைகள்**....24
9. **பொதுத்துறை வங்கிகளை பாதுகாப்போம்**....25
10. **செவிலியர்களின் தேவை சலுகைகள் அல்ல, உரிமைகள்**....27
11. **பணி நிறைவு பாராட்டு விழா**....30
12. **மாவட்ட தலைநகர் ஜாக்டோ - ஜியோ பேரணி - 22.04.2025**....31
13. **துறை தேர்வு பயிற்சி வகுப்பு**....34
14. **திண்டுக்கல் மாவட்டத்தில் TNPSC தேர்வுகளில் வெற்றி பெற்ற மாணவ மாணவியர்களுக்கான பாராட்டு விழா**....34

தலையங்கம்

# அகில இந்திய ஒருநாள் வேலைநிறுத்தம்...
# மைனாரிட்டி ஒன்றிய அரசுக்கு... எச்சரிக்கையாக அமையட்டும்!

**முதலாளிகளுக்கு சாதகமாக மோடி அரசு**

ஒன்றிய பாஜக அரசு கடைப்பிடித்து வரும் நவீன தாராளமய பொருளாதாரக் கொள்கைகளால் நிரந்தரத் தொழிலாளர்கள் குறைக்கப்பட்டு, ஒப்பந்த தொழிலாளர்களாக மாற்றப்படவும், கார்ப்பரேட் மற்றும் பெரும் நிறுவனங்கள் தொழிலாளர்களின் உழைப்பை சுரண்டவும் மோடி தலைமையிலான பாஜக அரசு அனைத்து வாய்ப்புகளையும் உருவாக்கி தருகின்றது. கார்ப்பரேட்டுகளுக்கு ஆதரவாக தொழிற்சங்க உரிமைகளை மோடி அரசு முடக்குகிறது.

**இந்திய விவசாயத்தை சீரழிக்க முயற்சி**

இடுபொருட்களின் விலை உயர்வுகளால் வேளாண் உற்பத்தி செலவு தொடர்ந்து அதிகரித்து வருகிறது. பெரும் பகுதி விவசாயிகள் கடனாளிகளாகிவிட்டனர். ஆட்சிக்கு வந்தால் விவசாயிகளின் வருமானத்தை இரட்டிப்பாக்குவேன் என்ற மோடி தலைமையிலான பாஜக ஆட்சியில் விவசாயிகள் தற்கொலைகள் அதிகரித்துள்ளன. விளைப்பொருட்களுக்கு உற்பத்தி செலவுடன் ஐம்பது சதவிகிதம் சேர்;த்து விலைநிர்ணயித்திட வேண்டும் என்ற எம்.எஸ். சுவாமிநாதன் குழுவின் பரிந்துரையை ஒன்றிய அரசு அமல்படுத்த தவறிவருவதால் விவசாயிகள் தற்கொலை நாடு முழுவதும் அதிகரித்துள்ளது. மேலும், விவசாயிகள் போராட்டங்களுக்கு பணிந்து ஏற்கனவே ரத்து செய்த-கார்பரேட் நிறுவனங்களுக்கு ஆதரவான - வேளாண் விரோதச் சட்டங்களை மோடி தலைமையிலான பாஜக அரசு கொல்லைப்புற வழியாக திரும்பவும் கொண்டு வர முயற்சித்து வருகிறது.

**புதிய வேலைவாய்ப்பு ஏற்பாடுகள் இல்லை**

கிராமப்புறங்களில் வேலை நாட்கள் குறைந்து வறுமையும் ஏழ்மையும் அதிகரித்து வரும் சூழலில் தேசிய கிராமப்புற வேலை உறுதித்திட்டத்தை பலப்படுத்துவதற்கு பதிலாக நிதி ஒதுக்கீட்டை வெட்டிச் சுருக்கி, திட்டத்தையே (MGNRGA) மோடி அரசு சீர்குலைக்கிறது, ஆண்டுக்கு இரண்டு கோடி பேருக்கு புதிய வேலை வாய்ப்புகள் உருவாக்கப்படும் என்ற பாஜக ஆட்சியில் நாட்டில் வேலையின்மை அதிகரித் வருகிறது. ஒப்பந்தத் தொழிலாளர்களாக - அத்துக்கூலிக்கு - உழைப்புச் சுரண்டலுக்கு மோடி அரசு சட்ட அங்கீகாரம் கொடுக்கிறது. உதாரணமாக அக்னிபாத் திட்டத்தின் மூலம் ஒப்பந்த அடிப்படையிலான பணியால் நாட்டின் பாதுகாப்புத்துறையே பாதிக்கப்பட்டுள்ளது.

**பெண்கள் மீதான வன்முறைகள் அதிகரிப்பு**

ஊதியம் வீழ்ச்சி அடைந்து வருவதால் வறுமை, ஏழ்மை நாளுக்கு நாள் அதிகரித்து வருகிறது. வேலை வாய்ப்புகளை உருவாக்கிட மோடி அரசு நடவடிக்கை எடுப்பதற்கு பதிலாக வேலை வாய்ப்பு, கல்வி, சுகாதாரம் ஆகியவற்றுக்கான நிதி ஒதுக்கீட்டை பட்ஜெட்டில் குறைத்து கார்ப்பரேட்டுகள், பெரும் நிறுவனங்கள் லாபம் ஈட்ட வரிச்சலுகைகளையும், வாய்ப்புகளையும் உருவாக்கி வருகின்றனர். சமவேலைக்கு சம ஊதியம் மறுக்கப்படுகிறது. நாடு முழுவதும் அதிகரித்து வரும் பெண்கள், குழந்தைகள் மீதான வன்முறைகளால் பெண்களின் பாதுகாப்பு கேள்விக்குறியாகிறது. பாதிக்கப்பட்ட பெண்களுக்கான நிர்பயா நிதி அதிகப்படுத்தப்படவில்லை. சைபர் கிரைம் குற்றங்கள் அதிகரித்துள்ளன. சாதி ஆணவப்படுகொலைகளை தடுத்து நிறுத்த இதுவரை சிறப்புச் சட்டம் இயற்றப்படவில்லை.

**மேலும் மேலும் தனியார்மயமாக்கும் கல்வி**

கல்வி, மேலும் மேலும் தனியார்மயப்படுத்தப்படுகிறது. அரசு கல்வி நிறுவனங்களை பாதுகாத்து, மேம்படுத்திட ஒன்றிய அரசு மாநில அரசுகளுக்கு உதவ மறுக்கின்றது. மாநில உரிமைகளைப் பறித்து தேசிய கல்விக் கொள்கை - 2020 ஐ திணிக்கின்றனர்.

**ஜிஎஸ்டி வரி விதிப்பின் தாக்கங்கள்**

ஜிஎஸ்டி வரி விதிப்பால் அத்தியாவசியப் பொருட்களின் விலை நாளுக்குநாள் கடுமையாக உயாந்து வருகிறது. இதனால் சாதாரண ஏழை எளிய மக்கள், உடைப்பாளிகள் கடும் சிரமத்திற்கு ஆளாகியுள்ளனர். ஒன்றிய அரசு ஏதாவது ஒருவகையில் வரியை உயர்த்தி மக்களை வஞ்சிக்கிறது. இவற்றில் இருந்து மக்களை திசை திருப்ப மதத்தின் பெயரால் மக்களை பிளவுபடுத்தி கலவரத்தை ஏற்படுத்துவது பாஜகவின் நடவடிக்கைகள் உள்ளன.

**எனவே, மக்கள் விரோத ஊழியர் விரோத கொள்கைகளுக்கு எதிராகவும், 12 அம்ச கோரிக்கைகளை வலியுறுத்தியும் 2025 மே 20 ஒரு நாள் அகிலஇந்திய வேலை நிறுத்தம் மைனாரிட்டி ஒன்றிய அரசுக்கு எச்சரிக்கை செய்யும் விதமாக ஒட்டுமொத்த அரசு ஊழியர்களும் இந்த போராட்டத்தில் ஈடுபடுத்திக்கொள்வோம். – ஆசிரியர்**

# தமிழக அரசு ஊழியர் வரலாற்றில் தமிழ்நாடு அரசு ஊழியர் சங்கம் 42 ஆம் அமைப்புதினம் எழுச்சியாக கொண்டாடுவோம்

1984 - தமிழ்நாட்டில் அரசு ஊழியர் வாழ்வில் மறக்கமுடியாத ஆண்டாகும். பொதுவாக ஆண்டுகளை குறிப்பிடும் போது கி.மு. அல்லது கி.பி. என குறிப்பிடுவார்கள். ஆனால், அரசு ஊழியர்களைப் பொறுத்தவரையில் 1984 க்கு முன்பு, அல்லது 1984 க்கு பின்பு என வரையறுப்பார்கள். ஏனென்றால், தேச அளவில் அரசு ஊழியர்களுக்கான ஊதிய விகிதத்தில் கடைக்கோடியில் இருந்த நிலமையில், அரசு ஊழியர்கள் உரிமைகள் புதைக்கப்பட்ட நிலையில் இம் என்றால் சிறைவாசம், ஏன் என்றால் வனவாசம் என்ற புரட்சிக்கவிஞர் பாரதியின் அனல் கக்கும் வரிகளை அதிகாரிகளிடம், அரசுகளிடமும் அனுபவித்த கொடுமையை அனுபவித்தவர்கள் கூறக்கேட்டிருக்கின்றோம்.

சுதந்திர காலத்திற்கு முன்பே கருத்தாலும், கரத்தாலும் உழைக்கக்கூடிய தொழிலாளர்களுக்கு, ஊழியர்களுக்கு குறைந்தபட்ச ஊதியம் வழங்கிட வேண்டும் என்ற கோரிக்கையை வைக்கப்பட்டது. 1946 மே 10ஆம் தேதி ஜஸ்டிஸ்.சீனிவாச வரதாச்சாரியார் தலைமையில் முதல் மத்திய ஊதியக்குழு அமைக்கப்பட்டது. அன்றைக்கு தொழிற்சங்க தலைவராக இருந்தவர் ஜவர்ஹர்லால் நேரு. ஆனால் சுதந்திரமடைந்து அவரே பாரதப்பிரதமரான பிறகு அதே கோரிக்கையை ஏற்க மறுத்து வாய்ப்பில்லை என மறுத்தார். தமிழ்நாட்டில் அரசு ஊழியர்கள் தங்கள் ஊதிய விகிதங்களை திருத்தியமைக்க வேண்டும், சம வேலைக்கு சம ஊதியம் வழங்கிட வேண்டும் என்ற கோரிக்கை 1946ல் சங்கமாக அணிதிரண்டு 1946 ஆகஸ்ட் 25ல் சென்னை கிண்டி பொறியியல் கல்லூரியில் 15,000 பேர் கூடிய மாநில மாநாடு நடைபெற்றது. ஆனால், தலைமைச்செயலக எழுத்தர்களுக்கு ஊதியம் ரூ.51 முதல் ரூ.100 வரையிலும், மற்ற எழுத்தர்களுக்கு ரூ.45 முதல் ரூ.95 வரை என பாகுபாடு உருவாக்கப்பட்டது.

**சுதந்திர பூமியில் முதல் வேலை நிறுத்தமும், அரசின் அடக்குமுறையும்.**

நாடு சுதந்திரமைடந்த நிலையில் நமது கோரிக்கைகள் எளிதில் கிடைத்துவிடும் என எதிர்பார்த்திருந்த நிலையில் பல்வேறு முறையீடுகள், பிரச்சாரங்கள், மாநாடுகள், என நடத்தியும் அரசு மறுத்தது மட்டுமல்லாமல் சட்டமன்றத்தில் ஒரு மணி நேரம் கூட உறுப்பினர்கள் அரசு ஊழியர்களின் கோரிக்கைகள் குறித்து விவாதிக்க அனுமதி மறுக்கப்பட்டது. வேறு வழியின்றி நாடு சுதந்திரமடைந்து நான்கு மாத காலத்தில் முதல் வேலைநிறுத்தம் 15.12.1947 அன்று தொடங்கி 21.12.1947வரை நடைபெற்றது. நிர்வாகிகள் மிரட்டல், சங்க கூட்டம் ரத்து, தடியடி, 144 தடைச்சட்டம், கண்ணீர் புகை குண்டுகள் வீச்சு, சங்கத்தலைவர்கள் சிறையிலடைப்பு, பணியிறக்கம், தற்காலிக ஊழியர்கள் பணிநீக்கம், ஊதிய உயர்வு நிறுத்தம், என அடக்குமுறைகள்கட்டவிழ்த்துவிடப்பட்டது. ஆங்கிலேய ஏகாதிபத்திய ஆட்சி தகர்ந்து, சுதந்திர இந்தியாவில் நமது தலைவர்கள் ஆட்சியில், நமது கோரிக்கைகள் கனிவுடன் பரிசீலிக்கப்படும் என எதிர்பாத்திருந்த நிலையில், ஆட்சியாளர்களின் கடும் நடவடிக்கைகள், நம்பிக்கைகளை தகர்த்தெரிந்தன. அதன்பிறகு சங்கத்தலைமைகள் ஒவ்வொரு செவ்வாய்கிழமைகளிலும் கோரிக்கைகளை முன்வைத்து பிரார்த்தனை கூட்டங்களை நடத்துவது என முடிவெடுக்கப்பட்டது.

சென்னையில் நடைபெற்ற அரசு ஊழியர்களின் மாநாட்டில் இடைக்கால நிவாரணமாக ரூ.5 அரசு அறிவித்துள்ளது நியாயம் தானா என கேட்டபோது மாநாட்டில் கலந்துகொண்ட முதலமைச்சர்.காமராஜர் என்னப்பா உண்ணாவிரதமெல்லாம் அறிவிக்கிறீங்க, யாருக்கையா பிரச்சனை இல்லை, மக்களுக்கு நான் ஏதாவது செய்ய வேண்டாமா? என கோபமாக பேசினார்.

பிரிட்டீஷ் ஏகாதிபத்தியம் மட்டும்தான் மக்களை கொள்ளையடித்தது என்பது அல்ல. நம்மவர்கள் ஆளும் இன்றைய காலத்திலும் மக்களை பிரித்தாள்வதென்பதே ஆளும் வர்க்கங்களின் கொள்கை. அப்படிப்பட்ட பிரித்தாளும் சூழ்ச்சிகளுக்கும், சாகசங்களுக்கும் சிலர் பலியாவதும், அதனால் அவர்களை நம்பி அவர்களுக்குப்பின்னால் போகக் கூடியவர்களும் பாதிப்புகளுக்கு உள்ளாவதும்தான் வேதனை. இப்படிப்பட்ட சதிவேலைகளுக்கு அரசு ஊழியர்கள் ஒரு போதும் பலியாகிவிடாமல், கவனமாக செயல்பட்டு முன்னேற வேண்டுமென நமது ஆசான் எம்.ஆர்.அப்பன் கூறியுள்ளார்.

மாநில அரசின் முதல் ஊதியக்குழு 1957 ஆகஸ்ட் 21 ஆம் தேதி ஜஸ்டிஸ்.ஜகனாததாஸ் தலைமையில் அமைக்கப்பட்டது. இக்குழுவால் அடிப்படை ஊதியம் ரூ.110 ஆக நிர்ணயிக்கப்பட்டது. ஆனால், சிறு விடுப்பு 15 நாட்களிலிருந்து 12 நாட்களாக குறைக்கப்பட்டது.

இது உங்களுடைய ஆட்சி உங்களுடைய ஆட்சியில் நீங்கள் ஏன் போராட வேண்டும்? வாதாடினாலே உங்கள் பிரச்சனைகளை நாங்கள் தீர்த்து வைத்து விடுவோம்" என்று அன்றைய ஆட்சியாளர்கள் கூறியது. இன்றும் அதையேதான் கூறிவருகிறார்கள் என்பது நம் அனைவருக்கும் தெரியும்.

1971ல் தொழிற்சங்கப் போராட்டங்களை இரும்புக்கரம் கொண்டு ஒடுக்குவேன் - டாக்டர் கலைஞர்

**துறைச்சங்கத்தின் முதல் வேலை நிறுத்தம்:**

அரசு ஊழியர்கள் மத்தியில் வேலைநிறுத்தம் என்றால் என்ன என்று மறந்துபோயிருந்த சூழலில், 1972 டிசம்பர் 5 ஆம் தேதி தொடங்கிய 28 நாள் வேலை நிறுத்தம் ஒரு சிறிய சங்கமாகிய தமிழ்நாடு தொழிற்பயிற்சி அலுவலர் சங்கம் நடத்திக்காட்டியது.

தமிழக அரசின் 1973-1974 பட்ஜெட் கூட்டத்தொடரில் 01.08.1972 முதல் அறிவிக்க வேண்டிய அகவிலைப்படியை வெறும் ரூ.10/- என அறிவித்தது மட்டுமல்லாமல்அதையும் வருங்கால வைப்பு நிதியில் சேர்த்திட அறிவிக்கப்பட்டது ஊழியர்களிடையே கொந்தழிப்பை ஏற்படுத்தியது. இந்த அநியாயத்தை எந்த சங்கமும் கேட்க முன்வராததால் இதற்கு மேலும் பொறுத்துக்கொள்ள இயலாது என பொள்ளாச்சியில் ஆர்.ஏ.கூடலிங்கம் தலைமையில் ஏப்ரல் 4ஆம் தேதி நடவடிக்கைக்குழு (Action committee) ஆரம்பிக்கப்பட்டது. இதன்பிறகே 1947 ல் கைவிடப்பட்ட அரசு ஊழியர்களுக்கான போராட்ட நடவடிக்கை மீண்டும் தமிழ்நாட்டில் துவங்கியது.

மத்திய அரசு ஊழியர்களுக்கு அறிவிக்கப்பட்டு வந்த அகவிலைப்படி தமிழ்நாடு அரசு ஊழியர்களுக்கு வழங்கப்படாமல் அவ்வப்போது தலைவர்கள் பிறந்தநாள் பரிசாக ரூ.10/- வழங்கப்பட்டு வந்தது. இவ்வாறு எட்டு தவணை அகவிலைப்படியை நிலுவையாக நீடித்தது. இதை கண்டித்து 1974 அக்டோபர் 31ஆம் தேதி சம்பள மறுப்பு போராட்டம் அறிவிக்கப்பட்டபோது ஊழியர்கள் கோபாவேசமாக 1,25,000 பேர் கலந்துகொண்டனர்.

**எட்டு தவணை அகவிலைப்படி முடக்கம்:**

முடக்கப்பட்ட எட்டு தவணை அகவிலைப்படியை ரொக்கமாக வழங்கிட வேண்டும் என 1975 ஏப்ரல் 5 ஆம் தேதி தர்ணா போராட்டம் நடைபெற்றது.

**துறைச்சங்கங்களின் தன்னெழுச்சியான போராட்டங்கள்:**

தமிழ்நாடு தேர்வாணைக்குழு, அரசு அச்சகம், இந்து அறநிலையத்துறை, கருவூலக்கணக்குத்துறை, ஆவண காப்பகம், வருவாய்துறை, ஐடிஐ, தொழில்வணிகத்துறை, போன்ற துறைகளில் ஊழியர்களின் போராட்ட குணமும், அன்றாட பிரச்சார தளங்களாக மாறிக்கொண்டிருந்தன. இதனை சகித்துக்கொள்ளாத அரசு பணியிறக்கம், ஊதிய வெட்டு, தொலைதூர பணியிடமாற்றம், குறிப்பாக சென்னை மாவட்டத்தலைவர் தோழர்.கே.ரங்கநாதன் கட்டாய ஓய்வில் அனுப்பப்பட்டார், கருவூலத்துறை தோழர். பாண்டியன் டிஸ்மிஸ் என ஊழியர்களை பழிவாங்கும் நடவடிக்கையை கையாண்டது. தர்ணா போராட்டத்திற்கு தலைமை தாங்கினார் என்ற ஒரே காரணத்திற்காக தோழர்.ஆர்.ஏ.கூடலிங்கம் தற்காலிக வேலைநீக்கம் செய்யப்பட்டு பணி ஓய்வுக்கு ஒருநாள் முன்புவரை பணியில் சேர அனுமதிக்கப்படவில்லை.

ஆசான்.எம்.ஆர்.அப்பன் அவர்களை அரசியல் சாசன விதி 311, 2(ஏ) (பி)யை பயன்படுத்தி விசாரணை எதுவுமில்லாமல் டிஸ்மிஸ் செய்திட அரசுக்கு பரிந்துரை அனுப்பப்பட்டது. இந்த செய்தி தமிழகம் முழுவதும் கடும் எதிர்ப்பு எழுந்தது இதன் காரணமாக கவர்னர் கே.கே.ஷா அவர்கள் அந்த பரிந்துரைக்கு ஒப்புதல் அளிக்கவில்லை.

கருவூலக்கணக்குத்துறையில் 10 அம்ச கோரிக்கைகளை வலியுறுத்தி 27.03.1980 முதல் 02.04.1980 வரை வேலைநிறுத்தம் நடத்தப்பட்டது. இந்தப்போராட்டம் மிக எழுச்சியாக நடைபெற்றது. கருவூலக்கணக்குத்துறைச்சங்க போராட்டம் வெற்றிபெற்று தமிழக வரலாற்றில் முதன்முறையாக எழுத்துபூர்வ ஒப்பந்தம் போடப்பட்டு 3474 புதிய பணியிடங்கள் உருவாக்கப்பட்டது உட்பட பல கோரிக்கைகள் வென்றெடுக்கப்பட்டு போராட்டம் முடிவுக்கு கொண்டுவரப்பட்டது.

அதேபோல மருத்துவத்துறை அமைச்சுப்பணியாளர்கள் சங்கம் கவர்னர் ஆட்சிக்காலத்தில் போராட்டம் நடத்தி எவ்வித பயனும் இல்லை என்பதை புறந்தள்ளி, வெற்றிகரமாக வேலைநிறுத்தம் நடத்திய காரணத்தால் இளநிலை உதவியாளர் பணியிடங்கள், உதவியாளர் பணியிடங்களாக தரம் உயர்த்தப்பட்டன. இதனால் பலருக்கு பதவி உயர்வு கிடைத்தது.

அரசே ஏற்றுக்கொண்டு கையெழுத்துப்போட்டுக்கொடுத்த ஒப்பந்தத்தை அமுல்படுத்திடக்கோரி 1980 நவம்பர் 1 ஆம் தேதி முதல் கருவூலக்கணக்குத்துறை அலுவலர் சங்கம் வேலைநிறுத்தம் அறிவித்தது. அனைத்து கருவூலங்களும் மூடப்பட்டு கஜானா சாவி யாரிடம் கொடுப்பது என அரசு யோசித்து வருவாய்துறை ஊழியர்களிடம் ஒப்படைப்பது என அரசு முடிவெடுத்தது. ஆனால், ஒரு துறைவாரிச்சங்கம் தங்களது நியாயமாக கோரிக்கைகளுக்காக போராடும்போது அவர்களின் போராட்டத்தை காட்டிக்கொடுக்கும் விதமாக அந்தப்பணியை நாங்கள் மேற்கொள் மாட்டோம் என தமிழ்நாடு வருவாய்துறை அலுவலர் சங்கம் மறுத்தது. இதுவே, துறைவாரிச்சங்கங்களின் ஒற்றுமைக்கு எடுத்துக்காட்டாக விளங்கியது. கருவூலத்துறை இயக்குநராக திரு.சடகோபன் ஊழியர்களை பல்வேறு பழிவாங்கும் நடவடிக்கைக்கு உள்ளாக்கினார். ஊழியர்களை, சங்க நிர்வாகிகளை நிற்கவைத்து பேசுவது, கட்டாய ஓய்வு, பதவி இறக்கம், ஊதிய வெட்டு, பணியிட மாற்றம், பணிநீக்கம் உள்ளிட்ட பல்வேறு நடவடிக்கைகளுக்கு அளானார்கள். அவ்வாறு நடைபெற்ற பழிவாங்கள் நடவடிக்கைக்கு காரணமான இயக்குனர் திரு.சடகோபன் அவர்களோடு ஆசான் எம்.ஆர்.அப்பன் அவர்கள் சங்க நிர்வாகிகளுக்கு உரிய மரியாதையோடு ஏற்பாடு செய்ய வலியுறுத்தி பேச்சுவார்த்தை நடத்தி போராட்டமும், பழிவாங்கும் நடவடிக்கைகளும் முடிவுக்குகொண்டுவரப்பட்டது.

அதேபோல வணிகவரித்துறையிலும் ஆணையராக இருந்த விஜயராகவன் ஐ.ஏ.எஸ். ஊழியர் விரோதப்போக்கை கையாண்டார். அசெஸ்மெண்ட், வரிவசூல், பீரியாடிகல் என கடும் வேலைப்பளுவினால் மன உளைச்சளுக்கு ஆளானவர்களை மேலும் அதிகாரிகளின் நடவடிக்கை என கடும் நெருக்கடிக்கு ஆளானார்கள். இதை எதிர்த்து அச்சங்கம் சென்னையில்பேரணி, கருப்பு பேட்ஜ், ஆர்பாட்டம், வெளிநடப்பு, இதை கண்டித்து 19 பேரை துறை சஸ்பென்ட் செய்தது. இதை எதிர்த்து மாநிலம் முழுவதும் 5000 பேர் பங்கேற்ற 12 நாள் வேலை நிறுத்தம் நடைபெற்றது. அனைத்து துறைவாரிச்சங்கங்களும் இப்போராட்டத்திற்கு ஆதரவு கரம் கொடுத்தனர். இதுபோன்ற நிகழ்வுகள் துறைவாரிச்சங்கங்கள் இணைந்து ஒரு போராட்ட குணம்மிக்க பொதுச்சங்கம் உருவாக்கவேண்டுமென ஒரு நோக்கத்தை உருவாக்கியது.

**இரட்டை பானை முறை முடிவுக்கு வந்தது.**

தமிழ்நாடு அரசு ஊழியர் சங்கம் வெறும் ஊதியத்திற்காக போராடும் அமைப்பு அல்ல. அரசு அலுவலகங்களில் இரட்டை பானைமுறை இருந்தது. ஒன்று தாழ்த்தப்பட்ட வகுப்பினர் தண்ணீர் அருந்த, மற்றொன்று உயர்ஜாதி பிரிவினர் தண்ணீர் அருந்த. தோழர்.எப்.எம்.குத்புதீன் தனது அரசுப்பணியில் சேர்ந்த நாள்முதல் தினமும் அந்த பானைகளை போட்டு உடைத்தார். அதே போல தமிழகம் முழுவதும் தமிழ்நாடுஅரசு ஊழியர் சங்கம் இந்த இயக்கத்தை நடத்தியது. இது ஒரு கட்டத்தில் இரட்டை பானை முறை முடிவுக்கு வந்தது.

**அரசு ஊழியர் மாத இதழ்:**

தமிழ்நாடு அரசு ஊழியர் சங்கம் ஆரம்பிப்பதற்கு முன்னதாக ஒரு மாத இதழ் ஆரம்பிக்க வேண்டும் என பரிசீலிக்கப்பட்டபோது பல்வேறு பெயர்கள் முன்மொழியப்பட்டு இறுதியாக "அரசு ஊழியர்" என பெயர் இறுதிப்படுத்தப்பட்டு 1981 டிசம்பர் முதல் இதழ் அச்சடிக்கப்பட்டு இன்றுவரை பிரசுரிக்கப்பட்டு வருகிறது.

1982ல் அரசு ஊழியர்கள் போராட்டம் நடத்தினால் பதவியை விட்டு விலகி எதிர் போராட்டம் நடத்துவேன். - எம்.ஜி.ஆர்.

**தமிழ்நாடு அரசு ஊழியர் சங்கம் உதயமானது:**

உதயமானது "தமிழ்நாடு அரசு ஊழியர் சங்கம்" 1984 மே மாதம் 6ஆம் நாள் மதுரை ரீகல் திரையரங்கில் அந்த வரலாற்றுச்சிறப்புமிக்க அரசு ஊழியர்களுக்கான மறுமலர்ச்சி உதயமானது.

தமிழக அரசு ஊழியர்களை ஒன்றுபடுத்தி ஓர் இயக்கம் கண்டாக வேண்டும். ஊதிய விகித மாற்றங்கள், இடைக்கால நிவாரணம், போனஸ் போன்ற பொருளாதார கோரிக்கைகளை முழுமையாக வென்றெடுக்க ஓர் இயக்கம் கண்டாக வேண்டும். அனைத்து ஊழியர்களையும் இயக்கத்தில் ஈடுபடுத்தி ஊழியர்களின் மிகப்பெரிய கோட்டையாக அமைக்க ஓர் இயக்கம் கண்டாக வேண்டும். நிராயுதபாணியாக உள்ள இலட்சக்கணக்கான அரசு ஊழியர்களை அரசின் தாக்குதலிலிருந்து பாதுகாத்துக்கொள்ள அரணாக திகழ ஓர் இயக்கம் கண்டாக வேண்டும். அரசு ஊழியர்கள் இயக்கத்தில் ஒட்டுமொத்தமாக ஒரு புதிய வழிகாட்டுதலின் கீழ் ஒற்றுமையும், ஒன்றுபட்ட அரணாகத் திகழ ஓர் இயக்கம் கண்டாக வேண்டும். அப்படி ஓர் இயக்கத்தை உருவாக்குவது இன்றைய வரலாற்று கட்டாயம். அதுவே தமிழ்நாடு அரசு ஊழியர் சங்கம் என ஆயிறக்கணக்கான பிரதிநிதிகள் உற்சாகமும், ஆரவாரமும் அரங்கம் முழுவதும் முழங்கப்பட்டது.

- இலங்கை இனவெறி படுகொலைகளை கண்டித்து வட்ட, மாவட்ட அளவில் உண்ணாவிரதப்போராட்டம் நடைபெற்றது.
- 30% ஊதிய உயர்வு, 15% வீட்டு வாடகைப்படி, ஒரு மாத ஊதியம்

போனஸ், இருவழிப் பயணச்சலுகை, தொகுப்பூதிய முறை ஒழிப்பு, உள்ளிட்ட கோரிக்கைகளை வலியுறுத்தி சென்னையில் 15.10.1985 முதல் 18.10.1985 வரை தொடர் உண்ணாவிரதப்போராட்டம். 6000 பேர் பங்கேற்றனர்.

- 29.10.1985 - பிரம்மாண்ட பேரணிகள் பல மாவட்டங்களில் கொட்டும் மழையில் ஏராளமான ஆண்,பெண் ஊழியர்கள் பங்கேற்றனர்.

ஜாக்டி பேரமைப்பின் 15.11.1985 முதல் ஆசிரியர்கள் காலவரையற்ற வேலைநிறுத்தத்தில் ஈடுபட்டார்கள். 12ஆயிரம் பெண்கள் உள்ளிட்ட 60,000க்கும் மேற்பட்டோர் கைது செய்யப்பட்டு சிறையிலடைக்கப்பட்டார்கள். அந்தப்போராட்டத்தில் 34பேர் மரணமடைந்தார்கள். தீபாவளி பண்டிகையை சிறையில் துக்க தீபாவளியாக அனுஷ்டித்தார்கள். இதுவரை அரசு ஊழியர், ஆசிரியர் இயக்க வரலாற்றில் இதுபோன்ற அதிக எண்ணிக்கையில் சிறையிலடைப்பு நடந்ததாக வரலாறு இல்லை. பள்ளிகள் மூடினாலும், அரசு அலுவலகங்கள் திறந்திருந்தால் அரசு கவனம் செலுத்தாது என போராட்டத்தை விரிவுபடுத்த ஜாக்டி பேரமைப்பு முடிவு செய்தது. அரசு ஊழியர் ஆசிரியர் ஒன்றுபட்ட போராட வேண்டும் என்ற குரல் சரியானது மட்டுமல்ல, நியாயமானதும் கூட என்கிற உணர்வு அரசு ஊழியர் ஆசிரியர்களிடையே உருவானது.

எந்த அரசாங்கத்தையும் அதன் வர்க்கததன்மையை வைத்து நாம் புரிந்து கொண்டால் தான் நம்மால் சரியான போராட்டங்களை திட்டமிட முடியும் - எம்.ஆர்.அப்பன்.

**10.02.1988– முதல் வேலைநிறுத்தம்:**

அகில இந்திய மாநில அரசு ஊழியர் சம்மேளனத்தின் முடிவின்படி தேசம் முழுவதும் நடைபெறக்கூடிய அன்று மத்திய அரசு ஊழியர்களுக்கு இணையான ஊதியம் என்ற கோரிக்கையை வலியுறுத்தி 10.02.1988 ஒருநாள் வேலைநிறுத்தம் தமிழ்நாடு அரசு ஊழியர் சங்கம் அறிவித்தது. அதற்கான முன்னேற்பாடாக 09.01.1988 அன்று மாவட்ட அளவில் பெருவாரியான ஊழியர்களைத்திரட்டி வேலை நிறுத்த ஆயத்தமாநாடு நடத்த முடிவெடுக்கப்பட்டது. 23.1.1988 மாநில வேலை நிறுத்த ஆயத்த மாநாடு மதுரையில் நடைபெற்றது. இந்த மாநாட்டிற்கு செல்லும் ஊழியர்களை அரசு மிரட்டியது. விடுப்பு மறுக்கப்பட்டது. பல்லாயிரக்கணக்கான ஊழியர்கள் திரண்டனர். 1947க்குப்பிறகு தமிழக வரலாற்றில் இலட்சக்கணக்கான அரசு ஊழியர்கள் பங்கேற்ற வேலைநிறுத்தம் மிகப்பெரிய எழுச்சியை ஏற்படுத்தியது. “ஐயோ நாமும் இந்த வேலை நிறுத்தத்தில் கலந்துகொண்டிருந்திருக்கலாமே” என வேலை நிறுத்தத்தில் கலந்துகொள்ளாத ஒருசில ஊழியர்கள் ஆதங்கப்படும் அளவில் வேலை நிறுத்தம் வெற்றிகரமாக நடைபெற்றது. இதுவே, மத்திய அரசுக்கு இணையான காலவரையற்ற அரசு ஊழியர், ஆசிரியர் போராட்டத்திற்கு உந்து சக்தியாக அமைந்தது.

**மத்திய அரசுக்கு இணையான ஊதியம் கேட்டு ஜேக்டீ போராட்டம் – 1988**

மத்திய அரசுக்கு இணையான ஊதியம் வழங்க வேண்டும் என்ற கோரிக்கையை வலியுறுத்தி அரசு ஊழியர்கள் ஆசிரியர்கள் இணைந்த ஜாக்டி பேரமைப்பின் 22.06.1988 காலவரையற்ற வேலைநிறுத்தம் தொடங்கியது. அரசு அலுவலகங்களில் ஆர்பாட்டங்கள் நடத்திட காவல்துறை தடியடி நடத்தி களைத்தபோது ஆசான் எம்.ஆர். அப்பன் காவலர்களைப்பார்த்து “அலுவலக வளாகத்திற்குள் உங்களுக்கென்ன வேலை... போங்க... போங்க... வெளியே போங்க... என விரட்ட ஆரம்பித்தார். போலீஸார் மிரண்டுபோய் வெளியேறினர். ஆளுநர் ஆட்சியென்பதால் கடும் அடக்குமுறைகள் நடைபெற்றது. நிர்வாகிகளை கைது

செய்ய காவல்துறை சென்றால்... கைது செய்வதானால் எங்களை கைது செய்யுங்கள் என ஊழியர்கள் வெகுண்டெழுந்தனர். போராட்டத்தில் ஈடுபட்டவர்கள் மீது அரசு ஒரு அறிவிக்கப்படாத யுத்தமே தொடுத்தது. 10,000பேர் சஸ்பென்ட் செய்யப்பட்டார்கள், ஒரு லட்சம் அரசு ஊழியர்கள், ஆசிரியர்களுக்கு குற்றக்குறிப்பாணை வழங்கப்பட்டது. 2500தற்காலிக ஊழியர்கள் பணிநீக்கம் செய்யப்பட்டார்கள். ஆயிரத்திற்கும் மேற்பட்டோர் கைதுசெய்யப்பட்டார்கள். ஆங்கிலேயர்கால ரௌலட் சட்டம் வந்ததுபோல இருந்தது அரசின் நடவடிக்கைகள். ஜூலை 22ல் சென்னை முற்றுகைப்போராட்டம் என முடிவெடுக்கப்பட்டது. முந்தைய நாளில் எல்லா ஊர்களிலும், இரயில்நிலையங்கள், பஸ்ஸ்டேண்டுகளில் காவல்துறை கைது நடவடிக்கைகள். ஜூலை 22 சென்னை மௌண்ட் ரோடில் காவல்துறை கவச வாகனம், ஏகே47துப்பாக்கி, தண்ணீர் பீச்சி அடிக்கும் இயந்திரம், ஸ்டிரைகிங் போர்ஸ் வாகனங்கள் என உள்நாட்டு யுத்தம் போல காட்சியளித்தது. அத்தனையும் மீறி லட்சக்கணக்கான அரசு ஊழியர்கள் ஆசிரியர்கள் ரோட்டில் திரண்டனர். தடியடியை தாங்கினார்கள், குதிரைப்படை தன் கால்களால் உதைத்தபோது மறியலில் முன் வரிசையில் இருந்த பெண் அரசு ஊழியர்கள், பெண் ஆசிரியர்கள் தங்கள் நெஞ்சில் குதிரையின் உதையை வாங்கினார்கள். கண்ணீர் புகை குண்டுகளால் கண்கள் சிவந்தன. போராட்டக்களமும் சிவந்தன. இவ்வளவு அடக்குமுறைகளையும் தாண்டி பலமணிநேரம் மவுண்ட் ரோட்டின் தெருவில் தைரியமாக அமர்ந்து கொண்டு மறியல் செய்தது இதுவரை இல்லாத வீரச்செயலாகும். ஒரு கட்டத்தில் இதற்கு மேல் இப்போராட்டத்தை தடுக்க முடியாது என ஆளுநர் ஆட்சி நிர்வாகிகளை அழைத்து பேச்சுவார்த்தை நடத்தி கோரிக்கைகளை நிறைவேற்ற முன்வந்தது. இந்த போராட்டம் தான் நாம் இன்று வாங்கிக்கொண்டிருக்கின்ற மத்திய அரசுக்கு இணையான ஊதியமாகும்.

பெண்கள் பங்கேற்காத இயக்கம் வெற்றிபெறாது என்பதை உணர்ந்து 13.10.1989 அன்று பெண் ஊழியர்களை விழிப்புணர்வு பெற வைக்கும் வகையில் அரசு ஊழியர் சங்கம் “மகளிர் மாநாடு” நடத்தியது.

1990 மே மாதத்தில் அகில இந்திய மாநாடும், ஜூன் மாதத்தில் வேலையின்மை எதிர்ப்பு பேரணி நடத்தப்பட்டது.

11.12.1990 முதல் 14.12.1990 வரை நடைபெற்ற மாநிலம் தழுவிய ஊழியர் சந்திப்பு இயக்கமும், 20.12.1990 அன்று பேரணிகளையும், 03.01.1991 அன்று வெளிநடப்பு போராட்டத்தையும் நடத்தியதன் மூலம் போனஸ் என்கிற நெடுநாளைய கோரிக்கை நிறைவேறியது.

1992ல் ஏப்ரல் 21, 22, 23 ஆகிய மூன்று நாட்கள் மாநிலம் முழுவதும் 5000 அலுவலகங்களின் முன்பு ஆர்பாட்டம்நடத்தியது. ஒட்டுமொத்த சிறுவிடுப்பு போராட்டம், உண்ணாவிரதப்போராட்டம்,

65 சங்கங்களைக்கொண்ட போராட்டக்குழு கூட்ட முடிவின்படி ஜூலை 25,26 மாவட்டங்களில் வேலைநிறுத்த ஆயத்த மாநாடுகளையும் பேரணிகளையும் நடத்தப்பட்டது. அதன்மூலம் சங்க நிர்வாகிகளுக்கு அரசு பேச்சுவார்த்தைக்கு அழைத்துப் பேசப்பட்டதன் அடிப்படையில்

- 214 வகை தொழில்நுட்பப் பிரிவினருக்கு வழங்கப்படாதிருந்த மத்திய அரசு ஊதிய விகிதங்கள் வழங்கப்படும்.
- 01.01.1992-முதல் முடக்கப்பட்ட 4 மாத அகவிலைப்படி தொகை GPF ல் இருப்பில் வைக்கப்படும்.
- மத்திய விகிதத்தில் வீட்டு வாடகைப்படி 1993-94 பட்ஜெட்டில் அறிவிக்கப்படும்.
- அமைச்சுப்பணியாளர்கள் மற்றும் அவர்தம் நிலையில் உள்ளவர்களுமாகச் சேர்த்து 2லட்சம் பேருக்கு மேல் 5% ஊதிய உயர்வு வழங்கப்படும்.

போன்ற கோரிக்கைகள் கிடைக்கப்பெற்றோம்.

**ஜீரோ பட்ஜெட் எதிர்ப்பு கருத்தரங்கம்:**

1991 இந்தியாவின் மிக முக்கியமான காலகட்டம். தேச மக்களின் தலைவிதியை மாற்றி எழுதிய காலமாகும். புதிய பொருளாதாரக்கொள்கைகளை அமுல்படுத்தப்பட்டதன் காரணமாக பல்வேறு சிக்கன நடவடிக்கைகளும், தனியார்மயமாக்களும், உலக மயமாக்களும், பெருமுதலாளிக்கு தாராளமயமாக்களும் முழுமையாக அமுல்படுத்தப்பட்டது. இதன் தாக்கத்தை அனைத்து ஊழியர்களும் தெரிந்துகொள்ளும் விதமாக 07.03.1993 அன்று ஜீரோ பட்ஜெட் எதிர்ப்பு கருத்தரங்கம் நடத்தப்பட்டது.

**இடதுசாரி அமைப்புகளால் கிடைத்த ஊதியமாற்றம்:**

1997ல் மத்திய அரசில் பாரதப்பிரதமராக 21.04.1997 ல் ஐ.கே.குஜ்ரால் பிரதமராக பொறுப்பேற்றார். அக்காலகட்டத்தில் ஓய்வுபெற்ற உச்சநீதிமன்ற நீதிபதியான ரத்தின்வேல் பாண்டியன் தலைமையில் 5வது ஊதியக்குழு தனது பரிந்துரைகளை மத்திய அரசிடம் அறிவித்தது. அதில் 20% ஊதிய உயர்வு மற்றும் நிர்வாக அமைப்பை வெட்டிச்சுருக்க வேண்டும், 30% ஆட்குறைப்பு, கம்ப்யூட்டர் மயமாக்கல் என பரிந்துரை வழங்கப்பட்டிருந்தது. ஆனால் அனைத்து தொழிற்சங்கங்களும் எதிர்ப்பு தெரிவித்தது. ஆனால் நிதியமைச்சர் மத்திய அரசு ஊழியர்களின் கோரிக்கையை கண்டு கொள்ளக்கூட தயாராக இல்லை. இக்கோரிக்கை இடதுசாரிக்கட்சிகளிடம் கொண்டுசெல்லப்பட்டது. ஏனென்றால் மத்திய அரசு இடதுசாரி கட்சிகளின் 72 பாராளுமன்ற உறுப்பினர்களின் ஆதரவோடு ஆட்சி அமைந்திருந்தது. எனவே, அக்கட்சிகள் பாரதப்பிரதமரை சந்தித்து ஊழியர்களின் நியாயமான ஊதிய உயர்வை வழங்கிட வேண்டும் என வலியுறுத்தியபோது ஊதிய மாற்றம் 40% ஆக அறிவிக்கப்பட்டது.

**ஒரே கையெழுத்தில 1,76,000பேர் டிஸ்மிஸ்:**

2002-2003 ஆம் ஆண்டு அன்றைய முதல்வர் அரசின் வருமானத்தில் 96% அரசு ஊழியர்களின் சம்பளத்திற்கே செலவிடப்படுகிறது. மீதமுள்ள 4%தான் பொதுமக்களின் திட்டங்களுக்க செலவிடமுடிகிறது. அரசு ஊழியர்கள் தங்களது தேவைகளை குறைத்துக்கொள்ள வேண்டும் என கருத்தை சொன்னதோடு மட்டுமல்லாமல் மளமளவென்று செயல்பாட்டிலும் இறங்கினார்.

- ஊழியர்களின் சொந்த சேமிப்பில் இருந்து (GPF) பெற்றுவந்த கடன் தொகையை 75%லிருந்து 50% மாக குறைக்கப்பட்டது.
- ஈட்டியவிடுப்பு சரண் செய்து ஊதியம் பெறுவது ரத்துசேய்யப்பட்டது.
- LTC, போனஸ் மற்றும் கருணைத்தொகை, ரத்துசெய்யப்பட்டது.
- அகவிலைப்படி உயர்வு தாமதப்படுத்தப்பட்டது.
- பணி ஓய்வுப்பலன்கள் வெட்டிக்குறைத்து ஆணை வழங்கப்பட்டது.
- அரசுத்துறைகளில் இனி பணி நியமனங்கள் தடைசெய்யப்படுவதாக, வேலை நியமனத்தடைச்சட்டம் அமுல்படுத்தப்பட்டது.

அரசின் இந்த அறிவிப்புகளால் ஒவ்வொரு அரசு ஊழியரும் மாதம் ரூ.5,000/- முதல் 12,000/-வரை இழப்பை சந்திக்கும் நிலை ஏற்பட்டது. எனவே, ஜாக்டோ-ஜியோ சார்பில் 12 இலட்சம் அரசு ஊழியர்கள், ஆசிரியர்கள் ஒரே குரலாக ஒட்டுமொத்தமாக வேலைநிறுத்தத்தில் ஈடுபட்டனர். சட்டமன்றத்தில் முதல்வர் அரசு ஊழியர் ஆசிரியர்களை சாட்டையால் அடித்து வேலை வாங்குவேன் என அறிவித்தார். 30.06.2003ஆம் தேதி சங்க நிர்வாகிகள் சமூக விரோதிகளைப்போல வீடு புகுந்து பெற்றோர்கள், குழந்தைகள் கதறக் கதற கைது செய்யப்பட்டார்கள்.

01.07.2003 அன்று பணி ஓய்வு பெற்றாலும் ஆசான் எம்.ஆர்.அப்பன் உட்பட 2212 பேர் கைது செய்யப்பட்டார்கள். 02.07.2003 முதல் காலவரையற்ற வேலை நிறுத்தம் தொடங்கியது. 04.07.2003ல் டெஸ்மா சட்டம் பிறப்பிக்கப்பட்டது. ஒரே கையெழுத்தில் உலக வரலாற்றில் 1,70,241 பேர் டிஸ்மிஸ் செய்யப்பட்டார்கள். அரசு குடியிருப்புகளை காலி செய்யுமாறு மிரட்டப்பட்டார்கள். குடும்ப உறுப்பினர்களை கைது செய்தது. சங்க நிர்வாகிகள் வீடு புகுந்து தேடப்பட்டார்கள். ஜூலை 6ஆம்தேதி நீதிமன்றத்தில் நீதிபதி திரு.தினகர் அவர்கள் பணி நீக்க உத்தரவை நிறுத்திவைப்பதாகவும், மறுநாளே அரசு ஊழியர்கள் வேலையில் சேர வேண்டுமென்றும் தீர்ப்பளித்தார். அன்றைய தினமே அரசு தீர்ப்புக்கு இடைக்காலத்தடை பெற்றது. மறுநாள் டிவிஷன் பெஞ்ச் விசாரணை தொடங்கியது. விசாரணையின் போது தலைமை நீதிபதி திரு.சுபாஷன் ரெட்டி அவர்கள் சிறையில் இருப்போரை உடனே விடுதலை செய்ய வேண்டும். மாநில நிர்வாக தீர்ப்பாயத்தற்கு செல்ல அறிவுரை. இதனால் டிஸ்மிஸ் செய்யப்பட்டவர்கள் பணிக்கு செல்வது கேள்விக்குறியானது. ஊழியர்களுக்கு ஆதரவாக CITU தொழிற்சங்க அமைப்பு சுப்ரீம் கோர்ட்டில் வழக்கு தொடுத்து. 21.07.2003 டிஸ்மிஸ்செய்யப்பட்டவர்கள் அனைவரையும் உடனடியாக பணியில் சேர அனுமதக்க வேண்டும். என அறிவுறுத்தியது. ஆனால் தமிழக அரசு மறுத்தது. 25.07.2003 அன்று ஊழியர்களை பணியில் சேர்த்துக்கொள்வதாகவும், பணி முறிவு இல்லாமல் பணி வரன்முறை செய்வதாகவும் உறுதியளித்தது. வேலைநிறுத்தத்தை தூண்டியவர்கள்மீது துறை நடவடிக்கை மேற்கொள்வதாகவும், தலைமைச்செயலகத்தில் அனைவர் மீதும் முதல் தகவல் அறிக்கை பதியப்பட்டது. தமிழகம் முழுவதும் சுமார் 20,000 பேர்இதனால் பணியில் சேர முடியவில்லை. அது 6072பேர் வருத்தக்கடிதம் கொடுத்து பணியில்சேர்க்கப்பட்டனர். பிறகு 999 பேராக குறைக்கப்பட்டது. 10.02.2004 அன்று 999 பேரை மீண்டும் பணியிலமர்த்தி அரசு உத்தரவிட்டது. இவ்வாறு சமூக விரோதிகளைப்போல, தேசதுரோக குற்றவாளிகளைப்போல நடத்தப்பட்டார்கள். நீண்ட பழிவாங்களுக்குப்பிறகு அனைவரும் பணியில் சேர்க்கப்பட்டார்கள்.

**பகை முடிக்கும் பணி முடித்தோம்:**

2004 பாராளுமன்ற தேர்தல் வந்தபோது அரசு ஊழியர் சங்கம் பகை முடிக்கும் பணி முடிப்போம் என்ற தலைப்பில் புத்தகம் அச்சடிக்கப்பட்டு தமிழகம் முழுவதும் அரசுக்கு எதிராக பிரச்சாரம் செய்யப்பட்டது. தபால் வாக்குகள் என்றைக்கும் இல்லாத வகையில் 99% தபால் வாக்குகள் செலுத்தப்பட்டது. இதனால் தமிழகம், பாண்டிச்சேரி 40 பாராளுமன்ற தொகுதிகளில் 0/40 வெற்றியை தமிழக அரசு பெற்றது. அதன்பிறகு நடந்தது நடந்தவையாக இருக்கட்டும், நடப்பவை நல்லவையாக இருக்கட்டும் என சமாதான பேச்சுவார்த்தைக்கு வந்தது பறித்த உரிமைகள் அனைத்தும் திரும்ப வழங்கப்பட்டது. வேலைநியமனத் தடைச்சட்டம் வாபஸ் பெறப்பட்டது. இதனால் தான் 2003க்குப்பிறகு இன்றுவரை தமிழகத்தில் 5,20,000 அரசு ஊழியர்கள், ஆசிரியர்கள் பணியில் சேர்ந்துள்ளது சாத்தியமானது என்பதை நாம் உணரவேண்டும்.

**வெஞ்சினம் கொண்டே வஞ்சகம் தீர்த்தோம்:**

2006 சட்டமன்றத்தேர்தலிலும் வெஞ்சினம் கொண்டே, வஞ்சகம் தீர்ப்போம். என உறுதியேற்று தமிழகம் முழுவதும் பிரச்சாரம் செய்யப்பட்டது. ஆட்சி அகற்றப்பட்டது. 11 தொகுதிகளில் தபால்வாக்குகளினாலும், 37 தொகுதிகளில் அரசு ஊழியர் குடும்ப வாக்குகளால் 1000 வாக்குகள் வித்தியாசத்தில் தோற்கடிக்கப்பட்டார்கள்.

**2016–காத்திருப்பு போராட்டம்:**

தமிழகத்தில் இனி போராட்டமே நடத்த இயலாது என்ற மனப்பான்மையில் மற்ற

சங்கங்கள் இருந்த நிலையில் தமிழ்நாடு அரசு ஊழியர் சங்கம் தன்னந்தனியாக 2016ல் 10 நாட்கள் வீரம் செறிந்த காத்திருப்பு போராட்டத்தை நடத்தி தமிழ்நாடு சட்டமன்றத்தில் 110 விதியின் கீழ் சத்துணவு ஊழியர்களுக்கு ஓய்வூதியம், செவிலியர்களுக்கு பதவி உயர்வுகள், பணிநிரந்தரம் உள்ளிட்ட 11 அரசாணைகளை பெற்றது.

**2017 ஊதியமாற்றம் நீதிமன்றத்தில்:**

2017ல் ஏழாவது ஊதிய மாற்றத்தை தமிழக அரசு தர மறுத்தபோது காலவரையற்ற வேலை நிறுத்தத்தை அறிவித்த போது, தமிழக அரசு வேலை நிறுத்தம் சட்ட விரோதமென நீதிமன்றத்தை நாடியது. அரசின் கருத்தை கேட்ட நீதிமன்றம் வேலைநிறுத்தத்தற்கு தடை விதித்தது. அடுத்த நாள் வேலைநிறுத்தம் இரண்டுமடங்கு ஊழியர்கள் பங்கேற்போடு நடைபெற்றது. நீதிமன்றத்தை யோசிக்கவைத்தது. ஒவ்வொரு நாளும் போராட்டத்தில ஊழியர்களின் பங்கேற்பு அதிகரித்துக்கொண்டே வந்தது. நீதிமன்றம் அரசு ஊழியர்கள் ஆசிரியர்களின் நியாயமாக கோரிக்கையை புரிந்துகொண்டு தலைமைச்செயலாளரை நீதிமன்றத்திற்கு வரவழைத்து ஊதிய மாற்றத்தை நீங்கள் அறிவிக்கின்றீர்களா? அல்லது நீதிமன்றம் அறிவிக்கட்டுமா? என கேட்டு ஊதிய மாற்றம் வழங்கிட ஆணையிட்டது.

2019ல் அமைப்பு நெருக்கடிக்கு உள்ளான போது சங்கத்தின் அடிப்படை உறுப்பினர்கள் முதற்கொண்டு முன்னனி ஊழியர்கள், வட்ட, மாவட்ட நிர்வாகிகள் என அனைவரும் கரம்கோர்த்து இரவு, பகல் பாராது, கண் துஞ்சாது, தங்களது குடும்பங்களைக்கூட மறந்தனர். அமைப்பா, தனிநபரா என கேள்வி வரும்போது அமைப்பே பிரதானம் என, எப்படிப்பட்ட முரண்பாடாக இருந்தாலும் அமைப்புக்குள்ளிருந்து போராடவேண்டும் என்பதை உணர்ந்து இந்த இயக்கத்தை பாதுகாப்பதே தங்களது உன்னத லட்சியம் என அமைப்பின் அரணாக நின்ற தோழர்களுக்கு இந்த நேரத்தில் இந்த அமைப்பை உருவாக்கிய, வளர்த்தெடுத்த மறைந்த மற்றும் மூத்த தோழர்கள் சார்பாக Red Salute.

**கோரிக்கைகள் நமக்கானது, போராட்டங்கள் தீர்வானது:**

இன்றைக்கும் அரசு அறிவித்துள்ள சரண் விடுப்பு தொகை, அகவிலைப்படி 2%, மகப்பேறு விடுப்பு தகுதிகாண் பருவத்திற்கு சேர்த்துக்கொள்ளுதல் உள்ளிட்ட அறிவிப்புகள் நமது ஒன்றுபட்ட போராட்டத்திற்கு கிடைத்த வெற்றி என்பதை உணர்வோம். அதேசமயம் பழைய ஓய்வூதியம், காலிப்பணியிடங்கள், சிறப்பு காலமுறை ஊதியம், தொகுப்பூதியம் பெறும் ஊழியர்களுக்கு காலமுறை ஊதியம், உள்ளிட்ட கோரிக்கைகளுக்காக அரசோடு பேச்சுவார்த்தை நடத்துவதும், பேச்சுவார்த்தை பலனளிக்காதபோது போராட்டத்தை தொடர்வதும் என சமரசமற்ற முறையில் ஊழியர்களின் கோரிக்கைகளுக்காக களம்காண்பது தமிழ்நாடு அரசு ஊழியர் சங்கம் மட்டுமே. எனவே, அரசு ஊழியர் வாழ்வு மலர, கோரிக்கைகள் வென்றெடுக்க 41ஆவது ஆண்டு சங்க அமைப்பு தினத்தை சங்கக்கொடியை உயர்த்திப்பிடித்து உறுதியோடு, மிக எழுச்சியோடு கொண்டாடுவோம்.

(உழைக்காளி மக்கள் என்றைக்கும் ஆளும் வர்க்கங்களின் தேன் தடவிய வார்த்தைகளுக்கும் உறுதிமொழிகளுக்கும் ஆசை காட்டல்களுக்கும் பலியாகாமல் தன்னைப்பற்றியும்... தன்னுடைய நிலைமைகளைப் பற்றியும் சரியாக உணர்ந்து கொண்டு... தன்னுடைய சயமரியாதைக்காகவும், உரிமைகளுக்காகவும் இடைவிடாது பிடிவாதமாகப் போராடுகின்றார்களோ அன்றைக்குத்தான் அவர்களால் அடிமைத்தளைகளிலிருந்து தங்களை விடுவித்துக்கொள்வதுடன் ஒரு வளமான வாழ்வை நோக்கி அடியெடுத்து வைக்க முடியும். -ஆசான்.எம்.ஆர். அப்பன்) ●

# தமிழ்நாடு அரசு ஊழியர் சங்கம்
**Tamilnadu Government Employees' Association**

(பதிவு எண் 237/84)

தோழர் எம்.ஆர். அப்பன் இல்லம்

எண்.46, தேரடித்தெரு, திருவல்லிக்கேணி, சென்னை - 600 005

28441286 e-mail : tngeastatecenter@gmail.com / web: www.tngea.org



மாநிலத் தலைவர்
**மு.பாஸ்கரன்**

மாநில துணைத் தலைவர்கள்
**சி.பரமேஸ்வரி**
**தெ.வாசுகி**
**மு.செல்வராணி**
**ஆ.அம்சராஜ்**
**தே.முருகன்**
**ச.தினேஷ்**

மாநிலப் பொருளாளர்
**சா.டானியல் ஜெயசிங்**

துணை பொதுச் செயலாளர்கள்
**வெ.சோமசுந்தரம்**
**அண்ணா.குபேரன்**
**கே.மகாலிங்கம்**
**ஆ.ரெங்கசாமி**

பொதுச் செயலாளர்
**மு.சீனிவாசன்**

மாநிலச் செயலாளர்கள்
**வே.விஜயகுமரன்**
**சு.வளர்மாலா**
**க.நீதிராஜா**
**செ.பிரகாஷ்**
**ஆ.ஜெசி**
**இ.மைக்கேல் லில்லி புஷ்பம்**


# அகில இந்திய வேலை நிறுத்தம் - 20.05.2025

கடந்த18.03.2025 அன்று புதுதில்லியில் பியரிலால் பவனில் INTUC, AITUC, HMS, CITU, AIUTUC, TUCC, SEWA, AICCTU, LPF, UTUC ஆகிய தொழிற்சங்கங்கள் கலந்துகொண்ட தேசிய தொழிலாளர் மாநாட்டில் மூன்றாம் முறையாக கூட்டணி மூலம் ஆட்சியல் அமர்ந்துள்ள மத்திய அரசின் கார்ப்பரேட் நலன் சார்ந்த கொள்கைகளால் தொழிலாளர்நலன் பாதிப்பு, பசி, குழந்தைகள் மற்றும் தாய்மார்களின் ஊட்டச்சத்தின்மை, வேலைவாய்ப்பின்மை போன்றவற்றால் மக்களின் இளைஞர்களின் வாழ்வாதாரம் மிக கடுமையான சீரழிவை உருவாக்கியுள்ளது.

ஆண்களின் தினசரி வருமானம் ரூ.203 முதல் ரூ.242 வரையிலும், பெண்களின் தினசரி வருமானம் ரூ.128 முதல் ரூ.159 வரை மட்டுமே என ஆய்வு கூறுகிறது. ஆனால் கார்ப்பரேட் நிறுவனங்களின் இலாபம் 22.3 சதவீதம் அதிகரித்துள்ளது. நமது நாட்டில் 5 சதவீத மக்களிடம் நாட்டின் 70% சொத்துக்கள் முடக்கப்பட்டுள்ளது. தற்போதைய மத்திய அரசின் கடந்த பத்தாண்டுகால சாதனையாக வறுமை 17% அதிகரித்துள்ளது. 2018 ஆம் ஆண்டின் ஆய்வின்படி 90சதவீதம் குடும்பங்கள் சர்வதேச தரத்தை விட ஏழ்மையாகவே உள்ளன. இந்நிலையில் மூன்றாம் முறை ஆட்சியில் புதிய தொழிலாளர் சட்டங்கள் என்பதை நடைமுறைப்படுத்துவதில் மேலும் தீவிரம் காட்டிவருகிறது. இது தொழிலாளர்களின் அனைத்து உரிமைகளையும் பறித்துவிடும். தொழிற்சங்கங்கள், தொழிலாளர் உரிமைகள், குறைந்தபட்ச ஊதியங்கள், சமூகப்பாதுகாப்புகள், வரையறுக்கப்பட்ட வேலை நிலமைகள், தொழிற்சங்க அங்கீகாரம், கூட்டுபேர உரிமைகள், போராட்டங்கள், வேலைநிறுத்தங்கள் போன்ற அனைத்து அடிப்படை உரிமைகளுக்கும் மேற்கண்ட சட்டம் மிகப்பெரிய சவாலாக உள்ளது.

UAPA (Unlawful Activities Preventiion Act), PMLA (Prevention of Money Laundering Act.), Jana-Wishwas Act போன்ற சட்டங்கள் பொது மக்களின் கருத்து வேறுபாடுகளை வெளிப்படுத்தும் அரசியலமைப்புச்சட்டத்தின் அடிப்படை உரிமைகளையும், புதிய தொழிலாளர் நலச் சட்டங்களை அமுல்படுத்திட மறுக்கும் அரசுக்கு எதிராக செயல்டுவதை கடுமையாக கட்டுப்படுத்தும் வகையில் அமைந்துள்ளது. அரசின் அனைத்து நிர்வாக அமைப்புகளையும் சர்வாதிகாரமயகமாக்குவதை நோக்கமாக மேற்கண்ட சட்டம் கொண்டுள்ளது. கருத்தாலும், கரத்தாலும் உழைக்கும் தொழிலாளர்கள் தங்களது நியாயமான உரிமைகளை பாதுகாக்கவும், கோரிக்கைகளுக்காகவும் போராடும் போது ஜாதி, மதம், இனம், மொழி மற்றும் கலாச்சார வேறுபாடுகள் இன்றி உழைக்கும் மக்கள் அனைவரும் ஒற்றுமையுடன் போராடவேண்டிய நிலை ஏற்பட்டுள்ளது, என தேசிய மாநாடு கருதுகிறது. மேற்கண்ட பிளவுவாத கருத்துக்களால் மக்களை, தேசத்தை, பாதுகாக்கும் போராட்டத்தில் உழைக்கும் மக்களின் ஒன்றுபட்ட எதிர்ப்பை பலவீனப்படுத்தவும் திசைதிருப்பவும் பிளவுவாத அரசியலாகும். மேலும், Boiler Act, Forest Act, Tea Act போன்ற 41 சட்டங்கள் மூலம் கார்ப்பரேட் நிறுவனங்களின் 180 குற்றங்களை மத்திய அரசு குற்றமற்றதாக்கி Ease of doing Business என சாதகமாக்கியுள்ளது.

பொதுமக்களின் மீதான பெரும் வரிச்சுமையால் உருவாக்கப்பட்ட தேசிய கருவூலத்தை ஒருசில கார்ப்பரேட் நிறுவனங்களுக்காக முழுமையாக திறந்துவிடப்பட்டுள்ளது. 14 தொழில்களுக்கு 1.97 லட்சம் கோடி ஊக்கத்தொகை, குறைந்த உற்பத்தி திட்டங்களுக்கு 76,000 கோடி ஊக்கத்தொகை, வேலைவாய்ப்புடன் கூடிய ஊக்கத்தொகை ரூ.2,00,000 வழங்கப்பட்டுள்ளது. ஆனால் கடந்த இரண்டு ஆண்டுகளில் வேலைவாய்ப்புகள் உருவாக்கப்படவில்லை.

ஆனால், பழைய ஓய்வூதியத்திட்டம் அமுல்படுத்த தொடர்ந்து புறக்கணித்துவருகிறது. சட்டீஸ்கர், ஜார்கண்ட், ராஜஸ்தான், இமாச்சல்பிரதேசம் உள்ளிட்ட மாநிலங்கள் தங்கள் அரசு ஊழியர்களுக்கு பழைய ஓய்வூதியத்திட்டத்தை அறிவித்தாலும் இதுவரை PFRDA பென்சன் நிதி ஆணையத்தில் செலுத்திய தொகையை திருப்பித்தர இயலாது என மறுத்துள்ளது. மாறாக NPSக்கு மாற்றாக UPS திட்டத்தை அமுல்படுத்திட முயற்சித்துள்ளது. தனியார்மயமாக்கல், தேசிய பணமயமாக்கல் மூலம் சாலைகள், விமானப்போக்குவரத்து, துறைமுகங்கள், கப்பல்துறை, தொலைதொடர்பு, கனிமவளம், பாதுகாப்பு உற்பத்தி, ஆராய்ச்சி விண்வெளி ஆய்வு என அனைத்தும் தனியார்மயப்படுத்தப்பட்டுவிட்டது.

தொழிலாளர்கள், விவசாயிகள், மாணவர்கள், இளைஞர்கள், பெண்கள் மற்றும் சமூகத்தில் பிற நலிவடைந்த பிரிவினரின் நலன்களுக்கு எதிராக மட்டுமல்ல இதுபோன்ற சமூக விரோத செயல்களை சுட்டிக்காட்டும் அறிவுஜீவிகள், சமூக செயல்பாட்டாளர்கள், எழுத்தாளர்கள் என அனைவருக்கு எதிராக செயல்படுகிறது. இவைகளிலிருந்து விடுபட்டு நமது உரிமைகளை பாதுகாத்திட

- PFRDA பென்சன் நிதி ஆணையத்தை ரத்து செய்திட வேண்டும்.
- அங்கன்வாடி, சத்துணவு, ஆஷா போன்ற ஊழியர்களை நிரந்தர ஊழியராக்க வேண்டும். அவர்களுக்கான பணிக்கொடை வழங்கிட வேண்டும்.
- 8வது ஊதியக்குழுவை விரைவில் அமுல்படுத்தப்பட வேண்டும்.
- சம வேலைக்கு சம ஊதியம் உறுதி செய்யப்பட வேண்டும். தொகுப்பூதியம், மதிப்பூதியம், அவுட்சோர்சிங், காண்ட்ராக்ட் பணி நியமனங்கள் நிரந்தரப்படுத்தப்பட வேண்டும்.
- ஐந்தாண்டுக்கு ஒருமுறை விலைக்குறியீட்டுடன் வழக்கமான திருத்தத்துடன் குறைந்தபட்ச ஊதியமாக ரூ.26,000 உறுதிப்படுத்தப்பட வேண்டும்.
- மத்திய அரசின் காலிப்பணியிடங்களை நிரப்பிட வேண்டும். மற்றும் காலாவதியான பணியிடங்களை புதுப்பிக்கப்பட வேண்டும்.
- 8 மணி நேர வேலை உள்ளிட்ட போராடிப்பெற்ற உரிமைகள் பறிக்கப்படுவதை தடுத்து நிறுத்தப்பட வேண்டும்.
- ILO உடன்படிக்கைகள் 87, 98, 100 ஆகியவற்றை உறுதிப்படுத்த வேண்டும்.
- ILO உடன்படிக்கை 155 மற்றும் 187 ன்படி வேலை உரிமைக்கான அடிப்படை கோட்பாடுகள் (FPRW) கடைபிடிக்கப்பட வேண்டும்.
- தேசிய நலன்கருதி இந்தியன் ரயில்வே, சாலைப்போக்குவரத்து, நிலக்கரிச்சுரங்கம், பிற சுரங்கங்கள், துறைமுகம், கப்பல்துறை, துறைமுகம், பாதுகாப்பு, தபால், மின்சாரம், எக்கு, பெட்ரோலியம், தொலைதொடர்பு, வங்கிகள் மற்றும் காப்பீட்டுத்துறை போன்றவற்றின் தனியார்கமயமாக்கலை தவிர்க்க வேண்டும்.
- காப்பீட்டுத்துறையில் 100% FDI யை நிறுத்தப்பட வேண்டும்.
- கல்வி மற்றும் சுகாதாரத்திற்கு போதிய நிதி ஒதுக்கப்பட வேண்டும்.

மேற்கண்ட கோரிக்கைகளை வலியுறுத்தி 2025 மே 20 அன்று நடைபெறவுள்ள வேலை நிறுத்தத்தின் அவசியத்தை வட்ட, மாவட்ட அளவில் பிரச்சார கூட்டங்கள் நடத்தப்பட வேண்டும். அறிக்கையை பிரசுரமாக வெளியிட வேண்டும். வேலைநிறுத்தம் வெற்றிகரமாக நடைபெற வாயில் கூட்டங்கள், உணவு இடைவேலை கூட்டங்கள், குடியிருப்புகளிலும் கூட்டங்கள் நடத்தப்பட வேண்டும். தேசவிரோத கொள்கைகளிலிருந்து தேசத்தைக்காப்பாற்ற, தொழிலாளர் விரோத சட்டங்கள், மக்கள் விரோத கொள்கைகளுக்கு எதிரான போராட்டத்தை மேலும் வலுப்படுத்த பொது வேலைநிறுத்ததிற்குப்பிறகு மறு ஆய்வு நடத்தப்பட வேண்டும்.

தோழமையுடன்,

பொதுச்செயலாளர்

# மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் 110 விதியின் கீழ் வெளியிட்ட அறிவிப்புகள்- 28.04.2025

அரசு ஊழியர்கள் மற்றும் ஆசிரியர்களின் நலன் கருதி பல்வேறு அறிவிப்புகளை விதி 110-ன்கீழ் வெளியிட்டு, தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையில் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. மு.க.ஸ்டாலின் அவர்கள் ஆற்றிய உரை.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தங்களின் அனுமதியோடு 110 விதியின்கீழ் அரசு ஊழியர்கள் தொடர்பான அறிவிப்புகளை வெளியிடுகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நிர்வாகத்தினுடைய தூண்களாவும், அரசின் கரங்களாவும் விளங்குபவர்கள் நம் அரசு ஊழியர்கள். இந்த திராவிட மாடல் அரசு பொறுப்பேற்றதிலிருந்து எண்ணற்ற மக்கள் நலத் திட்டங்களும், பல்வேறு துறைகளில் திட்டப் பணிகளும் பாராட்டத்தக்க வகையில் நிறைவேற்றப்பட்டு வருகிறது. அகில இந்திய அளவில் நம்முடைய தமிழ்நாடு பலவகையில் முதலிடத்திலேயும் முன்னோடி மாநிலமாகவும் திகழ்கிறது.

அரசு ஊழியர் மற்றும் ஆசிரியப் பெருமக்கள் அனைவரின் உழைப்பும், சீரிய பங்களிப்பும் இதற்கு ஒரு மிக முக்கியமான காரணம். அரசு நடைமுறைப்படுத்தி வருகிற நலத் திட்டங்கள், யாருக்கும் விட்டுப் போகாமல், அனைத்து மக்களையும் சென்றடைய பணியாற்றும் அரசு ஊழியர் ஒவ்வொருவரையும் இந்த தருணத்தில் தமிழ்நாடு அரசின் சார்பிலேயும், தனிப்பட்ட முறையிலேயும் பாராட்டி, வாழ்த்தி மகிழ்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தற்போது, அரசு ஊழியர் நலன் கருதி, அவர்களுக்காக ஒன்பது அறிவிப்புகளை அறிவிப்புகளை தங்கள் வாயிலாக வெளியிட விரும்புகிறேன்.

முதல் அறிவிப்பு; கோவிட்-19 பெருந்தொற்றுக் காலத்திலே, அரசின் நிதிநிலையின் மீது ஏற்பட்ட பெரும் சுமையின் காரணமாக நிறுத்தி வைக்கப்பட்டிருந்த அரசு அலுவலர்களுக்கான ஈட்டிய விடுப்பு சரண் செய்யும் நடைமுறையை, 01.04.2026 முதல், 15 நாட்கள் வரை சரண் செய்து பணப்பலன் பெறும் வகையில் மீண்டும் செயல்படுத்திட 2025-2026-ஆம் ஆண்டுக்கான நிதிநிலை அறிக்கையில் அறிவிப்பு வெளியிடப்பட்டது.

இருந்தாலும், அரசு அலுவலர்கள் மற்றும் ஆசிரியர்கள் இந்த அறிவிப்பை, இந்த ஆண்டே செயல்படுத்திட கோரிக்கை வைத்திருக்கிறார்கள்.

அரசு அலுவலர்கள் மற்றும் ஆசிரியர்களுடைய கோரிக்கையைப் பரிசீலித்து, ஈட்டிய விடுப்பு நாட்களில், 15 நாட்கள் வரை

1.10.2025 முதல் சரண் செய்து பணப்பயன் பெறலாம் என்பதை இந்த இந்த அவையில் அவையில் மகிழ்ச்சியுடன் தெரிவித்துக்கொள்கிறேன்.

**இரண்டாவது அறிவிப்பு:** 01-01-2025 முதல் 2 விழுக்காடு அகவிலைப்படியினை ஒன்றிய அரசு அலுவலர்களுக்கு உயர்த்தி வழங்கிட அறிவிக்கப்பட்டதன் அடிப்படையில், மாநில அரசுப் பணியாளர்களுக்கும் 01-01-2025 முதல் அகவிலைப்படி 2 விழுக்காடு உயர்த்தி வழங்கப்படும் என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மூன்றாவது அறிவிப்பு:** அரசுப் பணியாளர்கள் மற்றும் ஆசிரியர்கள், அவர்களுடைய குடும்பத்தினருடன் பண்டிகைகளைச் சிறப்பாகக் கொண்டாடிடும் வகையில், ஏற்கெனவே இதுவரை வழங்கப்பட்டு வரும் பத்தாயிரம் ரூபாய் பண்டிகை கால

முன்பணம் தற்போது இருபதாயிரம் ரூபாயாக உயர்த்தி வழங்கப்படும்.

**நான்காவது அறிவிப்பு:** அரசுப் பணியாளர்களுடைய குழந்தைகள் உயர்கல்வி பயில்வதில் இந்த அரசு மிகுந்த அக்கறை கொண்டுள்ளது. இந்த அடிப்படையில், அரசுப் பணியாளர்களுக்கு வழங்கப்படும் கல்வி முன்பணம் இந்த ஆண்டிலிருந்து தொழிற்கல்வி பயில ஒரு இலட்சம் ரூபாயாகவும், கலை மற்றும் அறிவியல் மற்றும் பாலிடெக்னிக் பயில ஐம்பதாயிரம் ரூபாயாகவும் உயர்த்தி வழங்கப்படும்.

**ஐந்தாவது அறிவிப்பு:** அரசுப் பணியாளர்கள் மற்றும் ஆசிரியர்கள், தமது பணிக்காலத்தில் தேவையின் அடிப்படையில் திருமண முன்பணமாக இதுவரை பெண் ஊழியர்களுக்கு பத்தாயிரம் ரூபாய் மற்றும் ஆண்களுக்கு ஆறாயிரம் ஆறாயிரம் ரூபாய் வழங்கப்படுகிறது. இதனை பலமடங்கு உயர்த்தி அரசு அலுவலர்கள், ஆசிரியர்கள் அனைவருக்கும் பொதுவாக ஐந்து இலட்சம் ரூபாயாக உயர்த்தி வழங்கப்படும்.

**ஆறாவது அறிவிப்பு:** தமிழர் திருநாளாம் பொங்கல் பண்டிகைக்கு முன்னாள் கிராம பணியமைப்பு உட்பட C மற்றும் D பிரிவு ஓய்வூதியதாரர்கள், அனைத்து வகை தனி ஓய்வூதியதாரர்கள் மற்றும் அனைத்துக் குடும்ப ஓய்வூதியதாரர்களுக்கு தமிழ்நாடு அரசால் ஆண்டுதோறும் வழங்கப்படும் பரிசுத் தொகை ஐந்நூறு ரூபாயிலிருந்து ஆயிரம் ரூபாயாக இனி உயர்த்தி வழங்கப்படும்.

**ஏழாவது அறிவிப்பு:** ஓய்வூதியதாரர்கள் அவர்தம் குடும்பத்தினருடன் பண்டிகையைச் சிறப்பாக கொண்டாடிட, தற்போது வழங்கப்படும் பண்டிகை கால முன்பணம், நான்காயிரம் ரூபாயிலிருந்து ஆறாயிரமாக உயர்த்தி வழங்கப்படும்.

**எட்டாவது அறிவிப்பு:** அண்மையில், பழைய ஓய்வூதியத் திட்டம், பங்களிப்பு ஓய்வூதியத் திட்டம் மற்றும் ஒருங்கிணைந்த ஓய்வூதியத் திட்டம் ஆகிய மூன்று ஓய்வூதியத் திட்டங்கள் குறித்து விரிவாக ஆராய்ந்திட ஒரு குழு அமைத்து, அந்தக் குழு தனது அறிக்கை மற்றும் பரிந்துரையை ஒன்பது மாதங்களுக்குள் சமர்ப்பிக்க ஆணையிடப்பட்டுள்ளது. பல்வேறு அரசு அலுவலர் மற்றும் ஆசிரியர் சங்கங்களின் கோரிக்கையின் அடிப்படையில், இந்தக் குழு தனது அறிக்கை மற்றும் பரிந்துரையை செப்டம்பர் மாதம் 30-ம் தேதிக்குள் சமர்ப்பித்திட அறிவுறுத்தப்படும்.

**ஒன்பதாவது அறிவிப்பு:** திருமணமான அரசு பெண் பணியாளர்களுக்கு மகப்பேறுக்காக ஒன்பது மாத காலமாக இருந்த விடுப்பை 01.07.2021 முதல் ஓராண்டு காலமாக உயர்த்தப்பட்டு, ஊதியத்துடன் கூடிய மகப்பேறு விடுப்பு அரசால் வழங்கப்பட்டுவருகிறது. ஆனால், தற்போது உள்ள விதிகளின்படி மகப்பேறு விடுப்பு காலம் தகுதிகாண் பருவத்திற்கு (Probation period) கணக்கில் எடுத்துக் கொள்ளப்படுவதில்லை. இதன் காரணமாக அரசு பணிகளில் பணியாற்றி வரும் பல்லாயிரக்கணக்கான இளம் மகளிர் மகப்பேறு விடுப்பு எடுத்தால், தகுதிகாண் பருவம் உரிய காலத்திற்குள் முடிக்க இயலாமல் அவர்களுடைய பதவி உயர்வு பாதிக்கப்படுவதுடன், பணிமூப்பினை இழக்கும் நிலையும் ஏற்படுகிறது. மகளிர் முன்னேற்றத்திற்காக அனைத்து முயற்சிகளையும் எடுத்து வரும் இந்த அரசு, அரசுப் பணிகளில் பணியாற்றிவரும் மகளிரின் பணி உரிமைகளை பாதுகாக்கும் வகையில், இனிவரும் காலங்களில் அரசு பெண் ஊழியர்களின் மகப்பேறு விடுப்புக் காலத்தினை அவர்களது தகுதிகாண் பருவத்திற்கு கணக்கில் எடுத்துக் கொள்ளலாம் என்று முடிவு செய்துள்ளது.

முத்தமிழறிஞர் தலைவர் கலைஞர் அவர்களது வழியில் அரசு ஊழியர்களுக்கு அரணாக, அரசு ஊழியர்களின் நலனில் அக்கறை கொண்ட அரசாக திராவிட மாடல் அரசு என்றென்றும் தொடரும் தொடரும் - தொடரும் என்று கூறி அமைகிறேன். ●

ஜாக்டோ ஜியோ

# ஜாக்டோ – ஜியோ (JACTTO – GEO)

Joint Action Council of Tamilnadu Teachers Organisation and Government Employees Organisation

தொடர்பு முகவரி: நெ.46, தேரடித் தெரு, திருவல்லிக்கேணி, சென்னை – 05. போன்: 28441286 Email: jacttogeoconference@gmail.com

நாள்: 29.04.2025

பெறுநர்:

**மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள்,**

**தலைமைச்செயலகம், சென்னை - 600009**

## மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் 110 விதியின் கீழ் வெளியிட்டுள்ள அறிவிப்புகள் ஜாக்டோ-ஜியோ சார்பில் வரவேற்கிறோம்.

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் இன்று சட்டமன்ற பேரவையில் 110 விதியின் கீழ் அரசு ஊழியர், ஆசிரியர் மற்றும் அரசுப்பணியாளர்கள் நலன் காக்கும் விதமாக வெளியிட்டுள்ள 9 அறிவிப்புகளான ஈட்டிய விடுப்பு 15 நாட்கள் சரண் செய்து பணப்பயன் 01.10.2025 முதல் பெறலாம் என அறிவிக்கப்பட்டுள்ளது. 01.01.2025 முதல் 2% அகவிலைப்படி உயர்த்தி அறிவிக்கப்பட்டுள்ளது. புதிதாக பணியில் சேர்ந்துள்ள பெண் அரசு ஊழியர்கள் பயன்பெறும் வகையில் மகப்பேறுவிடுப்பு காலத்தை அவர்களின் தகுதிகாண் பருவத்திற்கு கணக்கில் எடுத்துக்கொள்ளப்படும் என மாண்புமிகு முதல்வர் அவர்களின் அறிவிப்பை தமிழ்நாடு அரசு ஊழியர் சங்கத்தின் சார்பாக வரவேற்கிறோம். மேலும், பண்டிகை கால முன்பணம் ரூ.20,000/- ஆக உயர்த்தப்பட்டுள்ளது. அரசு ஊழியர்களின் குழந்தைகள் உயர்கல்விக்கான முன்பணம் 1,00,000/- மற்றும் 50,000/- ஆக உயர்த்தப்பட்டுள்ளது. அரசு ஊழியர்களின் திருமண முன்பணம் ரூ.5,00,000/- ஆக உயர்த்தப்பட்டுள்ளது. ஆகிய அறிவிப்புகளை ஜாக்டோ ஜியோ சார்பாக வரவேற்கிறோம்.

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் மேற்கண்ட அறிவிப்புகளை வரவேற்கும் ஜாக்டோ-ஜியோ கீழ்கண்ட எங்களின் வாழ்வாதார கோரிக்கைகளையும் விரைந்து நிறைவேற்ற வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறோம்.

இடைநிலை ஆசிரியர்களுக்கும், முதுகலை ஆசிரியர்களுக்கும், உயர்நிலைப்பள்ளி மற்றும் மேல்நிலைப்பள்ளி தலைமை ஆசிரியர்களுக்கும், உடற்கல்வி இயக்குநர் மற்றும் உடற்கல்வி ஆசிரியர்களுக்கும் ஒன்றிய அரசுக்கு இணையான ஊதியம் வழங்கிட வேண்டும்.

தொடக்கக் கல்வித்துறையில் பணிபுரியும் 90% க்கும் மேற்பட்ட ஆசிரியர்களுக்கு பாதிப்பினை ஏற்படுத்தும் வகையில் வெளியிடப்பட்டுள்ள பள்ளிக்கல்வித்துறை அரசாணை எண்.243, நாள்: 21.02.2023 மற்றும் ஆதிதிராவிடர் பழங்குடியினர் நலத்துறையின் அரசாணை எண்.76, நாள்: 30.09.2024 ஆகிய இரண்டையும் ரத்து செய்திட வேண்டும்.

# ஜாக்டோ – ஜியோ (JACTTO – GEO)

ஜாக்டோ ஜியோ

Joint Action Council of Tamilnadu Teachers Organisation and Government Employees Organisation

தொடர்பு முகவரி: நெ.46, தேரடித் தெரு, திருவல்லிக்கேணி, சென்னை – 05. போன்: 28441286 Email: jacttogeoconference@gmail.com

முதுநிலை ஆசிரியர்கள், அனைத்து ஆசிரியர்கள், அரசு ஊழியர், அரசுப்பணியாளர்கள், கண்காணிப்பாளர்கள், தலைமைச்செயலகம் உள்ளிட்ட அரசு அலுவலர்கள், களப்பணியாளர்கள், பல்வேறு துறைகளில் உள்ள தொழில்நுட்ப ஊழியர்கள், ஊர்தி ஓட்டுநர்கள் ஆகியோருக்கான ஊதிய முரண்பாட்டினைக் களைய வேண்டும். கல்லூரி பேராசிரியர்களுக்கான நிலுவையிலுள்ள பணிமேம்பாடு (CAS) ஊக்க ஊதிய உயர்வு வழங்கிட வேண்டும். உயர்நிலை மற்றும் மேல்நிலைப்பள்ளிகளில் பணிபுரியும் இடைநிலை ஆசிரியர்களை பட்டதாரி ஆசிரியர்களாக உயர்த்த வேண்டும்.

சிறப்பு காலமுறை ஊதியம் பெற்றுவரும் சத்துணவு, அங்கன்வாடி, வருவாய் கிராம உதவியாளர்கள், நகராட்சி செயலாளர்கள், ஊர்புற நூலகர்கள், கல்வித்துறையில் பணியாற்றும் துப்புறவுப்பணியாளர்கள், தொகுப்பூதியத்தில் பணியாற்றும் MRB செவிலியர்கள், சிறப்பு ஆசிரியர்கள், அரசு தொழிற்பயிற்சி நிலைய PPP & COE ஊழியர்கள், பல்நோக்கு மருத்துவப்பணியாளர்கள் ஆகியோருக்கு வரையறுக்கப்பட்ட ஊதியம் வழங்கிட வேண்டும். மேலும் ஒருங்கிணைந்த பள்ளிக்கல்வித்துறையில் பணியாற்றும் பணியாளர்கள், ஆசிரியர்கள் மற்றும் பகுதிநேர ஆசிரியர்கள் பணிநிரந்தரம் செய்யப்பட வேண்டும்.

சாலைப்பணியாளர்களின் 41 மாத பணி நீக்க காலத்தை பணிக்காலமாக வரன்முறைப்படுத்த வேண்டும்.

அரசின் பல்வேறு துறைகளில் 30 விழுக்காட்டிற்கு மேல் காலியாக உள்ள பணியிடங்களை நிரப்பிடுவதற்கான நடவடிக்கைகளை உடனடியாக மேற்கொள்ள வேண்டும். கருணை அடிப்படை நியமனத்தை மீண்டும் 25 விழுக்காடு உயர்த்த வேண்டும்.

இலட்சக்கணக்கான அரசு ஊழியர், ஆசிரியர்கள் மற்றும் அரசுப்பணியாளர்களின் பணி ஓய்வுகாலத்திற்கு பின்னர் வாழ்க்கை பாதுகாப்பை உறுதிப்படுத்தக்கூடிய வாழ்வாதார கோரிக்கையான மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்களின் தேர்தல்கால வாக்குறுதியான பழைய பயனளிப்பு ஓய்வூதியத் திட்டத்தையும் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் நிறைவேற்ற வேண்டும் என ஜாக்டோ-ஜியோ நம்பிக்கையோடு வலியுறுத்துகிறது.

மாநில ஒருங்கிணைப்பாளர்கள்
ஜாக்டோ-ஜியோ

# ஒப்பந்த முறை என்ற நவீன சுரண்டலை தமிழக அரசு கைவிட வேண்டும்

**- கே.ஆறுமுகநயினார்**

அரசாலும், அதன் கைகளாலும் மக்கள் சுரண்டப்படுவதற்கு முடிவுகட்டும் நேரம் வந்து விட்டது என உணர்கிறோம்.'' -சென்னை உயர்நீதிமன்றத்தின் இரு நீதிபதிகள் கொண்ட அமர்வு வழங்கியுள்ள தீர்ப்பில் தான் இப்படி சொல்லப்பட்டுள்ளது. கடந்த 2002ஆம் ஆண்டு வேலூரில் துவங்கப்பட்ட திருவள்ளுவர் பல்கலைக்கழகத்தில் பணிபுரிந்த 66 தினக்கூலி தொழிலாளர்களின் பணி நீக்கம் சம்பந்தமான வழக்கில் தினக்கூலி, ஒப்பந்தமுறை என்ற பெயரால் அரசுத் துறையில் நடைபெறும் அநீதிகளை படம் பிடித்துக் காட்டியுள்ளது சென்னை உயர்நீதி மன்றம்.

### அடிப்படை கட்டமைப்பின்றி துவங்கப்பட்ட பல்கலைக்கழகம்

2002ஆம் ஆண்டு ஆரம்பிக்கப்பட்ட இந்த பல்கலைக்கழகத்திற்கு அரசு அனுமதித்த ஊழியர்கள் எண்ணிக்கை மொத்தம் 22 பேர் மட்டுமே. பதிவாளர், துணைவேந்தரின் நேர்முக உதவியாளர், ஆய்வக தொழில்நுட்ப ஊழியர், கணினி ஊழியர் போன்ற பதவிகளுக்கு மட்டுமே அரசு அனுமதி அளித்துள்ளது. போதுமான கட்டமைப்பு வசதிகள் இன்றி அரசு ஒரு பல்கலைக்கழகத்தை எப்படி துவங்கியது? அடிப்படைக் கட்டமைப்பு என்பது வெறும் கட்டிடங்கள், உபகரணங்கள் மட்டும் அல்ல. "போதுமான பணியாளர்களை நிய மனம் செய்வதுதான் அடிப்படைக் கட்டமைப்பு'' எனவும் நீதிபதிகள் குறிப்பிட்டுள்ளனர். அலுவலக பணி, துப்புரவு பணி, காவல் பணி போன்ற அடிப்படைப் பணிகளை பார்க்க ஒரு ஊழியர் கூட இல்லை. இதுபோன்ற பணிகளுக்கு துணைவேந்தர் தினக்கூலி தொழிலாளர்களை நியமித்து வருடக்கணக்கில் வேலை வாங்கிவிட்டு எந்தவித காரணமும் இன்றி ஊழியர்கள் பணிநீக்கம் செய்யப்பட்டுள்ளனர்.

### உமாதேவி வழக்கும் அரசின் தவறான வாதமும்

நீண்டகாலம் பணிபுரிந்த தங்களை நிரந்தரம் செய்ய வேண்டும் என நீதிமன்றத்தை நாடினால், "இந்த தொழிலாளர்கள் முறையாக நியமனம் செய்யப்படவில்லை பின்வாசல் வழியாக பணிக்கு வந்துள்ளனர். பின்வாசல் வழியாக பணிக்கு வந்தவர்களை நிரந்தரம் செய்ய முடியாது'' என கர்நாடக அரசுக்கு எதி ராக உமாதேவி என்பவர் தொடர்ந்த வழக்கில் உச்சநீதிமன்றம் கூறியுள்ளது. உச்சநீதிமன்ற தீர்ப்புப்படி இவர்களை நிரந்தரம் செய்ய முடியாது என அரசுத்தரப்பு வாதாடுகிறது. இது சரியல்ல என்று கூறியுள்ள சென்னை உயர்நீதிமன்றம், "அரசுத்தரப்பில் சொல்லப் பட்ட உமாதேவி வழக்கில் உச்சநீதிமன்றம் பல்வேறு விஷயங்களைக் கூறியுள்ளது. பின் வாசல் வழியாக பணிக்கு வந்தவர்களை நிரந்தரம் செய்ய முடியாது என்பதை மட்டும் வாதத்தில் முன்வைக்கும் தமிழக அரசு, இந்தத் தீர்ப்பில் சொல்லப்பட்டுள்ள இதர விஷயங்களையும் கணக்கில் கொள்ள வேண்டும்'' எனக் குறிப்பிட்டு வழக்கில் சொல்லப் பட்டுள்ள இதர விஷயங்களை நீதிமன்றம் தமிழக அரசுக்கு சுட்டிக்காண்பித்துள்ளது.

### அரசுத்துறையில் பன்முகச் சுரண்டல்

**அரசுத்துறையில் நிரந்தரமற்ற பணியாளர்கள் பன்முகச் சுரண்டலை எதிர்கொள்கின்றார்கள்:**

1. குறுகிய காலம் அல்லது பருவகால வேலை களில் மட்டுமே தினக்கூலி ஒப்பந்த தொழி லாளர்களை நியமிக்க முடியும். நிரந்தரமற்ற தொழிலாளர்களை நியமிப்பதன் அடிப்ப டையே இதுதான்.

2. அத்தியாவசியமான பணிகள் என தெளி வாகத் தெரிந்த பின்பும், தற்காலிக அல்லது ஒப்பந்த தொழிலாளர்களை நியமிப்பது, கண்ணியமான வேலைப் பாதுகாப்பு என்ற நிரந்தர தொழிலாளர்களுக்கு உரிய சலுகைக ளைப் பறிக்கும் நோக்கம் கொண்டது.

3. தற்காலிக தொழிலாளர்கள் முறை நீண்ட கால சேவையை கணக்கில் கொள்ளாமல் எப்போது வேண்டுமானாலும் பணிநீக்கம் செய்ய முடியும் என்ற பாதுகாப்பற்ற சூழ்நிலை யிலேயே உள்ளது.

4. தற்காலிக ஊழியர்களுக்கு ஊதிய உயர்வு, பதவி உயர்வு, திறமையை வளர்ப்பதற்கான வாய்ப்புகள் போன்றவை மறுக்கப்படுகிறது. நிரந்தர தொழிலாளர்கள் செய்யும் பணியை செய்தாலும், சேவை செய்தாலும் அவர்களு க்கு பாகுபாடு காட்டப்படுகிறது.

5. தற்காலிக பணி நியமனம் என்பதன் மூலம் தொழிலாளர்கள் கடுமையாக சுரண்டப்படு கின்றனர். இந்த சுரண்டலை நிலைநிறுத்துவ தற்கும், நிரந்தரத்தன்மை உள்ள வேலை களை ஒழிப்பதற்கும் வெளி முகமை நியமனம் என்பது கேடயமாக பயன்படுத்தப்படுகிறது.

6. தற்காலிக ஊழியர்களுக்கு அடிப்படை உரிமைகள் மறுக்கப்படுவதுடன் நிரந்தர தொழிலாளர்களின் சலுகைகளான ஓய்வூதியம், வருங்கால வைப்புநிதி, சுகாதார காப்பீடு, சம்பளத்துடன் கூடிய விடுப்பு போன்ற சமூகப் பாதுகாப்பு அவர்களுக்கும், அவர்களது குடும்பத்தாருக்கும் மறுக்கப்படுகிறது. நோய் பாதிப்பு போன்றவற்றால் ஓய்வு காலத்தில் குடும்பமே துயரத்திற்கு உள்ளாகும் சூழ் நிலை உருவாக்கப்படுகிறது.

இவற்றையெல்லாம் கூறி அரசுத்துறைக ளில் நிரந்தரப்படுத்தாமல், ஒப்பந்தமுறை, தற்காலிக வேலைக்கு ஆட்கள் எடுப்பது போன்றவை தவறானது என சுட்டிக்காண்பித்துள்ளது நீதிமன்றம்.

### அரசுகள் மதிக்காத நீதிமன்ற தீர்ப்புகள்

உச்சநீதிமன்றத்தின் இந்த தீர்ப்பை சுட்டிக்காட்டியுள்ள நீதிபதிகள் இத்தீர்ப்பின் நோக்கத்தை சீர்குலைக்கக் கூடாது எனவும் அரசுக்கு தெளிவுபடுத்தியுள்ளனர். இத்துடன் இதே தன்மையுடைய வேறு சில வழக்குகளை யும் மேற்கோள் காட்டி பாதிக்கப்பட்ட தொழிலா ளர்களை நிரந்தரப்படுத்தி பணியில் சேர்க்கவும் உத்தரவிட்டுள்ளது. உமாதேவி வழக்கில் 2006ஆம் ஆண்டு உச்சநீதிமன்றத்தில் சொல்லப்பட்ட தீர்ப்பை சுட்டிக்காண்பித்துதான் சென்னை உயர்நீதி மன்றம் இந்த தீர்ப்பை அளித்துள்ளது. இந்த தீர்ப்பு வெளிவந்து 20 ஆண்டுகள் ஆகும் நிலையிலும், இந்த தீர்ப்பை பற்றி மத்திய, மாநில அரசுகள் கவலைப்படவில்லை. நீதிமன்றங்கள் தெளிவாக தீர்ப்புகளை சொன்னாலும், அரசுகளே அதை மதிப்பது கிடையாது. தமிழகத்தில் அனைத்து துறைகளி லும் இப்போது ஒப்பந்த முறை மூலம் தொழி லாளர்கள் நியமிக்கப்படுகிறார்கள்.

### நிரந்தரப் பணியிடங்களில் ஒப்பந்தப் பணியாளர்கள்

போக்குவரத்துக் கழகங்களில் ஓட்டுனர், நடத்துனர் பணி என்பது நிரந்தரத்தன்மை உள்ள பணியாகும். இதற்கு ஒப்பந்த ஊழியர்க ளை நியமித்து வருகிறது தமிழக அரசு. இது சம்பந்தமாக சிஐடியு வழக்கு தொடர்ந்தது. இது அரசின் கொள்கை முடிவு என அரசு வழக்கறி ஞர் நீதிமன்றத்தில் வாதாடுகிறார். சுமார் ரூ. 60,000 கோடி மதிப்பீட்டில் சென் னையில் மெட்ரோ ரயிலின் இரண்டாவது கட்டம் செயல்படுத்தப்பட உள்ளது. இத்திட்டத்திற்கு முழுமையாக ஒப்பந்த பணியாளர்களை நிய மிக்க தில்லி மெட்ரோவிற்கு காண்ட்ராக்ட் விடப்பட்டுள்ளது. பல கோடி ரூபாய் மக்களின் வரிப்பணத்தை செலவு செய்து ஆரம்பிக்கப்

படும் திட்டத்தில் ஒரு நிரந்தர தொழிலாளி கூட நியமிக்கப்படவில்லை. கண்ணியமற்ற சமூகப் பாதுகாப்பற்ற முறையில் தான் தொழி லாளர்களை நியமிக்க வேண்டுமா? 12 ஆண்டுக்கு 6000 கோடி ரூபாய்க்கு ஒப்பந்த தொழிலாளர்களை நியமிக்க தில்லி மெட்ரோ காண்ட்ராக்ட் எடுத்துள்ள நிலையில், தமிழக இளைஞர்களுக்கு வேலை வாய்ப்பு கிடைக்குமா என்பதும் கேள்விக்குறியே? அனைத்து மாநகராட்சிகள், உள்ளாட்சிகள், அரசு மருத்துவமனைகள் பெரும்பகுதியான அரசுத்துறைகள் அனைத்திலும் ஒப்பந்தமுறை நியமனம் சர்வசாதாரணமாகிவிட்டது.

**கேள்விக்குறியாகும் சமூகநீதி**

சமூகநீதியின் அடிப்படைகளில் ஒன்று இட ஒதுக்கீடு. குறிப்பிட்ட பிரிவு மக்களுக்கு கல்வி, வேலைவாய்ப்பில் அளிக்கும் இட ஒதுக்கீட்டின் மூலம் அவர்களது பொருளாதார நிலையை உயர்த்துவது மட்டுமல்ல அரசு அதிகாரத்தில் ஒரு பங்களிப்பை வழங்குவது இதன் மூலம் சமூக மாற்றத்திற்கு வழி செய்வது என இட ஒதுக்கீடு சம்பந்தமாக மண்டல் கமிஷன் கூறியுள்ளது. தமிழகத்தில் இட ஒதுக்கீட்டிற்கு நீண்ட வரலாறு உள்ளது. இந்தியாவில் தமிழகத்தில் மட்டும்தான் 69 சதவீத இட ஒதுக்கீடு உள்ளது. இந்த இட ஒதுக்கீடு அரசுத்துறையில் மட்டுமே உண்டு. அரசுத்துறை வேலைகளை எல்லாம் ஒப்பந்த முறையில் தனியார் நிறுவனத்திற்கு வழங்கிவிட்டு சமூக நீதி, இட ஒதுக்கீடு பற்றி பேசுவது ஏட்டுச் சுரைக்காய் போன்றது இது கறிக்கு உதவாது.

வேலைவாய்ப்பற்ற இட ஒதுக்கீட்டால் என்ன பயன்? கண்ணியமான, சமூகப் பாதுகாப்புடன் கூடிய வேலை வாய்ப்பை வழங்கி தனியார் நிறு வனத்திற்கு முன் மாதிரியாக இருக்க வேண்டிய அரசே ஒப்பந்த முறையில் பணியாளர்களை நியமனம் செய்வது சமூக நீதிக்கு எதிரானது.

**தமிழக அரசுக்கு வேண்டுகோள்**

தமிழ்நாட்டில் அனைத்து அரசுத் துறைக ளில் உள்ள காலிப்பணியிடங்களைப் பூர்த்தி செய்து ஒப்பந்த முறைக்கு தமிழக அரசு முடிவு கட்ட வேண்டும். நீதிமன்ற தீர்ப்பு மட்டுமல்ல நூற்றாண்டுகால போராட்டத்தின் பலன்களை உறுதிப்படுத்துவதாகும். ஒப்பந்த முறைக்கு முடிவு கட்டுவது காலத்தின் கட்டாயம் என்பதே தமிழக அரசுக்கு நாம் விடுக்கும் வேண்டுகோள். ●

# வாசகர் கடிதம் – கா. பால் பாண்டி

தோழர் கந்தர்வன் என்ற உடன் எனக்கு நினைவுக்கு வருவது பாவா செல்லத்துரை ஒரு உரையில் தோழர் குறித்து பேசியது நினைவுக்கு வந்தது. ஒருவர் உடல்நலம் பாதிக்கப்பட்டு மயக்கம் போட்டு விழுந்தவுடன் யாரும் அவரை மருத்துவமனையில் சேர்க்க முன்வரவில்லை. கந்தர்ழர்மன் உடனடியாக புதுக்கோட்டை மருத்துவமனைக்கு செல்கிறார். அங்கு முடியாது என்று சொன்னவுடன் அங்கிருந்து தஞ்சாவூர் மருத்துவமனையில் சேர்த்துவிட்டு அந்த நபருக்கு ரத்தம் வழங்கிவிட்டு சாலை ஓரத்தில் உடல் சேர்த்து நடத்து வரும்போது சாலையோரத்தில் ஒரு பழரச கடைகார் கேட்பார் ரத்தம் கொடுத்துவிட்டு வருகிறாயா? ஆம். எப்படி என்று கேட்க கையில் பஞ்சு . இந்தா சாத்துக்குடி சாறு என்று கொடுப்பார். காசு கொடுத்தவுடன், அட சீ. ரத்தம் கொடுத்தவரிடம் நான் என்றும் காசு வாங்குவது இல்லை என்று கூறினார்.

யாருமே அந்த அடிப்பட்ட நபருக்கு உதவி செய்ய வில்லை நான் தான் செய்தேன் என்ற கர்வம் மனதில் இருந்தது. பழரச கடைக்காரரர் ஒரு நொடியில் என் கர்வத்தை உடைத்து விட்டார் என்ற நிகழ்வுதான் வந்தது. உரை என் மனதில் என்றும் மறவாத உரை. தோழருக்கு வீரவணக்கம். நமது இதழில் நமது சங்கத்தின் வளர்ச்சிக்காக, தன்னலமற்ற ,போராட்ட களம் பல கண்ட தலைவர்கள் குறித்த வரலாற்றை எழுத வேண்டும். இன்றைய நான்காம் தலைமுறைக்கு தெரியவேண்டும். தோழர் சுவாமிநாதன் கட்டுரை பல அரிய தகவல்கள். முதலாளிகள் மனநிலை தொழிலாளர் உழைப்பு சுரண்டல், விலையேற்றம், உணவு பணவீக்கம், வரி மேலும் மேலும் வரி இது வாங்கும் சக்தியை பாதிக்கிறது. பல தகவல்கள். நல்ல கட்டுரை. ●

கட்டுரை

# மே 11: சிப்பாய் புரட்சி தின நினைவலைகள்

**- பெரணமல்லூர் சேகரன்**

இந்தியாவின் முதல் 'சுதந்திரப் போர்' என மார்க்ஸால் வர்ணிக்கப்பட்ட 'சிப்பாய் புரட்சி' ஆளும் வர்க்கத்தால் 'சிப்பாய்க் கலகம்' என சிறுமைப் படுத்தப்பட்டது.

பிரித்தானியக் கிழக்கிந்தியக் கம்பனியின் சிப்பாய்கள் மே 11, 1857 இல் இந்தியாவில் மீரட் என்ற நகரில் தொடங்கிய கிளர்ச்சியைக் குறிக்கும். இக்கிளர்ச்சி பின்னர் இந்தியாவின் பல இடங்களிலும், குறிப்பாக இந்தியாவின் மத்திய மலைப் பகுதிகளில், பரவியது. பொது மக்கள் பலரும் இக்கிளர்ச்சியில் பங்கெடுத்துக் கொண்டனர். முக்கிய கிளர்ச்சி இன்றைய உத்தரப் பிரதேசம், உத்தரகாண்டம், வடக்கு மத்தியப் பிரதேசம், டெல்லி, மற்றும் குர்காவுன் ஆகிய இடங்களை மையமாகக் கொண்டிருந்தது. கிளர்ச்சியாளர்கள் பிரித்தானியப் படையினருக்கு ஒரு பெரும் சவாலாக விளங்கினர். ஜூன் 20, 1858 இல் குவாலியர் நகரின் வீழ்ச்சியுடன் இது முடிவுக்கு வந்தது. இக்கிளர்ச்சி ""இந்தியாவின் முதலாவது விடுதலைப் போர்", அல்லது "சிப்பாய்க் கலகம்" எனவும் அழைக்கப்படுகிறது.

1764 ஆம் ஆண்டு பக்சார் போருக்குப் பின் கிழக்கிந்திய வணிகக் குழு இந்தியாவில் ஒரு அரசியல் சக்தியாக எழுச்சியுற்றது. பின் வந்த காலங்களில் இந்தியாவின் வளங்கள் கம்பெனியின் வணிக முன்னேற்றத்திற்காகவே பயன்படுத்தப்பட்டன. இந்தியர்களின் நலன்கள் பெரிதாக பொருட்படுத்தப்படவில்லை. செல்வச் சுரண்டல், இந்திய கைவினைத் தொழில்களின் நலிவு போன்றவை இந்தியாவில் பொருளாதார தாக்கத்தை ஏற்படுத்தி இருந்தன. தொழில் புரட்சியின் விளைவாக பிரிட்டன் தொழிலகங்களில் இயந்திரங்கள் அதிக அளவில் அறிமுகப்படுத்தப்பட்டன. புதிதாக அறிமுகமான இயந்திரங்களின் உதவியால் உற்பத்திப் பொருட்களும் அதிக அளவில் தயாரிக்கப்பட்டன. ஆங்கிலேயே வணிகர்கள் இவற்றை விற்பனை செய்யும் சந்தையாகவே இந்தியாவை பார்க்கத் தொடங்கினர். அதே நேரம் இந்தியாவில் கைவினைஞர்களால் தயாரிக்கப்பட்ட இந்தியப் பொருட்களுக்கு பிரிட்டனில் அதிக வரிகள் விதிக்கப்பட்டன. எனவே இந்தியப் பொருட்களுக்கான தேவை சரிந்து இந்தியத் தொழில்கள் அழிவை நோக்கி சென்றன. இது தவிர ஆங்கிலேயர்கள் நிலவரி மக்கள் விருப்பத்திற்கு எதிராக அமைந்திருந்தன.

அப்போது புதிதாக அறிமுகப்படுத்தப்பட்ட என்பீல்டு வகை துப்பாக்கிகள் உடனடிக் காரணமாக அமைந்தன. அவ்வகை துப்பாக்கிகளுக்கு வழங்கப்பட்ட தோட்டாக்கள் ஒரு வகை உறையால் மூடப்பட்டிருந்தன. இவற்றை வாயால் கடித்து உறைகளை அகற்ற வேண்டியிருந்தது. இந்த உறைகள் மாட்டுக் கொழுப்பு மற்றும் பன்றிக் கொழுப்பினால் ஆனவை என்று தகவல் பரவியது. இது இந்து மற்றும் முஸ்லிம் சமயத்தைச் சார்ந்த ராணுவ வீரர்களின் சமய உணர்வை புண்படுத்துவதாக ராணுவ வீரர்கள் எண்ணினர். இதன் காரணமாக ராணுவ வீரர்கள் அவ்வகை உறைகளை வாயால் கடித்து நீக்க மறுத்து உயர் அதிகாரிகளை எதிர்த்தனர். இதன் தொடர்ச்சியாக 1857 மார்ச் 29 ஆம் நாளில் மங்கள் பாண்டே என்ற ராணுவ வீரர் ஒருவர் பாரக்பூரில் தனது உயரதிகாரியைத் தாக்கி தன் துப்பாக்கியால் சுட்டுக் கொன்றார். இது ஆங்கிலேய ராணுவத்தில் பணிபுரிந்த இந்திய வீரர்கள் ஆங்கிலேயர்களுக்கு எதிராக கிளர்ச்சியில் ஈடுபட ஒரு ஆரம்பமாக அமைந்தது. ●

கட்டுரை

# பொதுத்துறை வங்கிகளை பாதுகாப்போம்

**- இரா.மங்களபாண்டியன்**

நம் நாடு 1947 ஆம் வருடம் பிரிட்டிஷ் ஏகாதிபத்தியத்திடமிருந்து சுதந்திரம் பெற்றிருந்தாலும் பொருளாதார ரீதியாக மிகவும் பின்தங்கிய நாடாகவே இருந்து வந்தது. நாட்டின் உள்கட்டமைப்பிற்குத் தேவையான முதலீடுகளை அளிக்க அன்றைய தனியார் வங்கிகளும் அவற்றை உரிமை கொண்டாடிய தேசிய முதலாளிகளும் முன்வரவில்லை. குறிப்பாக கிராமப்புற பொருளாதாரத்தையே அதிகம் சார்ந்திருந்த நம் நாட்டில் விவசாயத்துறை, கால்நடை வளர்ப்பு, சிறு குறு தொழில் நிறுவனங்கள், குடிசைத் தொழில்கள் போன்ற நாட்டின் முக்கியத் துறைகள் புறக்கணிக்கப்பட்டன. மேலும் தனியார் வங்கிகள் அவற்றை சொந்தம் கொண்டாடிய நிறுவனர்களின் குடும்பத் தொழில்களுக்கே பெரும்பாலும் கடன் வழங்கி வந்தன. இதனால் அந்நிறுவனங்கள் நட்டமடையும் போது அவ்வங்கிகளும் நட்டமடைந்து 1947 முதல் 1969 ஆம் ஆண்டு வரையிலான காலகட்டத்தில் மட்டும் சுமார் 559 தனியார் வங்கிகள் திவாலாகி மக்களின் சேமிப்புகள் களவாடப்பட்டன.

இந்நிலையிலேயே 1969 ஆம் ஆண்டு 14 பெரிய தனியார் வங்கிகளும் , 1980 ல் மேலும் 6 தனியார் வங்களும் தேசியமாக்கப்பட்டன. அதுவரையிலும் கிராமப்புற பகுதிகளையும் அதன் பொருளாதாரத்தையும் தொடர்ந்து புறக்கணித்து வந்த வங்கிகள், அதன் பிறகு தங்கள் கிளைகளை கிராமப்புறங்களை நோக்கி பெருமளவில் அதிகரித்தன. மேலும் வங்கிகளில் வழங்கப்படும் மொத்த கடனில் 40 சதவீதம் முன்னுரிமை துறைகளுக்கு வழங்க வேண்டும் என்றும், அவற்றில் 18 சதவீதம் விவசாய கடனாக வழங்கப்பட வேண்டும் என்பதும் கட்டாயமாக்கப்பட்டது குறிப்பாக நம் நாட்டின் பொருளாதார வளர்ச்சியில் முக்கியப் பங்காற்றிய வெண்மை புரட்சி மற்றும் பசுமைப் புரட்சி போன்றவற்றை பொதுத்துறை வங்கிகளின் மூலமாகவே அரசாங்கத்தால் செயல்படுத்த முடிந்தது. இவ்வாறு 1970 களின் தொடக்கத்தில் இருந்து 1990 களின் துவக்கம் வரை ஏறக்குறைய இருபது ஆண்டுகள் இந்திய பொருளாதாரம் அபரிமிதமான வளர்ச்சியடைந்தது. பல நூறு ஆண்டுகளாக உரிமைகள் மறுக்கப்பட்டு சமூகத்தால் புறக்கணிக்கப்பட்ட அடித்தட்டு மக்களின் ஒரு பிரிவினருக்கு நியாயமான இட ஒதுக்கீடுகளின் மூலம் வங்கித் துறையில் வேலை வாய்ப்புகள் கிடைத்தன. ஆனால் சர்வதேச சூழலில் ஏற்பட்ட மாற்றங்களின் விளைவாகவும், ஐஎம்எப் மற்றும் உலக வங்கி போன்றவற்றின் அழுத்தங்களாலும் 1991 க்கு பிறகு இந்திய ஆட்சியாளர்கள் தனியார்மய, தாராளமய பொருளாதாரக் கொள்கைகளை நோக்கி தங்கள் பார்வையைத் திருப்பத் தொடங்கினர்.

மக்களின் சொத்தான பொதுத்துறை நிறுவனங்களை வேரோடும், வேரடி மண்ணோடும் பெயர்த்தெடுத்து கார்ப்பரேட் கயவர்களின் கைகளில் உள்ள பாசக்கயிற்றில் கட்டிப்போடுவதில் துடிப்புடன் செயல்பட்டுக் கொண்டிருக்கும் தற்போதைய ஒன்றிய அரசு பொதுத்துறை வங்கிகளையும் விட்டுவைக்கவில்லை.

இந்த அரசாங்கம் ஆட்சிக்கு வரும் போது 27 அரசு வங்கிகள் இருந்தன. அவற்றில் ஐடிபிஐ வங்கியை இந்த நிதி ஆண்டிற்குள் முழுமையாக தனியார்மயப்படுத்தும் வேலைகள் துரிதமாக நடைபெற்று வருகின்றன. மற்ற 26 வங்கிகள் ஒன்றோடொன்று இணைக்கப்பட்டு 12 வங்கிகளாக சுருக்கப்பட்டு இது வரை நாடுமுழுவதும் சுமார் 5000 கிளைகள் வரை மூடப்பட்டுள்ளன. இன்னும் பல்லாயிரம் கிளைகள் மூடப்படுவதற்கான வாய்ப்புகளும் உள்ளன. ஒவ்வொரு துறைகளிலும் அதிகபட்சமாக நான்கு நிறுவனங்களை மட்டுமே அரசு வைத்துக்கொள்ளும் என்பதைக் கொள்கை முடிவாகவே அறிவித்து செயல்படுத்தி வருகிறது இந்த ஒன்றிய அரசு. அதன்படி தற்போதுள்ள 12 அரசு வங்கிகளில் அதிகபட்சமாக 4 வங்கிகளை மட்டும் வைத்துக்கொண்டு மற்ற 8 வங்கிகளும்

ஒரு சில ஆண்டுகளில் தனியார்மயமாக்கப்படும் என்பது தெளிவாகிறது.

பொதுத்துறை வங்கிகள் தனியார் மயமாக்கப்பட்டால் இதுவரை நாட்டின் சாமானிய மக்களுக்கு கிடைத்து வந்த கல்விக்கடன்கள், சிறு தொழில் கடன்கள், பயிர்க் கடன்கள் மற்றும் பல்வேறு மானியங்களுடன் கூடிய கடன்கள் போன்றவை முற்றாக ஒழிக்கப்பட்டு மக்கள் கந்து வட்டிக் கடைகளை விட மோசமாக செயல்படும் தனியார் நிதி நிறுவனங்களிடம் தங்கள் பொருளாதாரத் தேவைகளுக்காக செல்ல வேண்டிய கட்டாயம் ஏற்படும். இதனால் மக்களின் கைகளில் பணப்புழக்கம் வெகுவாகக் குறைந்து, உற்பத்தி செய்யப்பட்ட பொருட்களை விற்க முடியாமல் ஒரு பெரும் தேக்கம் உருவாகி நாட்டின் பொருளதாரா சுழற்சியில் ஒரு பெரிய பாதிப்பு ஏற்படும். மறுபுறம் நூற்றுக்கணக்கான கிளைகள் குறைக்கப்பட்டு, பல்லாயிரக்கனக்கான பணியிடங்கள் வெட்டிச் சுருக்கப்படும். இதனால் ஆயிரக்கனக்கான படித்த இளைஞர்களின் எதிர்கால வேலை வாய்ப்புகள் பறிபோகும்.

மேலும் பொதுத்துறை வங்கிகளில் கிடைக்கும் லாபம் அவற்றின் பெரிய பங்குதாரர் என்ற அடிப்படையில் ஆண்டுதோறும் அரசாங்கத்திற்கு ஒரு மிகப்பெரிய வருவாயை அளிக்கக்கூடியது. நாட்டின் அனைத்து பொதத்துறை வங்கிகளும் ஆண்டு தோறும் செயல் பாட்டு லாபத்தைக் (Operating Profit) கொடுத்தே வருகின்றன. ஆனால் அவற்றில் பெரும்பாலனவை கார்ப்பரேட் பெருநிறுவனங்களுக்கு வராக்கடன் தள்ளுபடி என்ற பெயரில் ஒதுக்கீடு செய்யப்படுவதால் அவ்வங்கிகளால் நிகர லாபத்தை காட்ட முடிவதில்லை. உதாரணமாக பாஜக அரசாங்கம் ஆட்சிக்கு வந்த கடந்த 7 ஆண்டுகளில் மட்டும் ஒட்டு மொத்த பொதுத்துறை வங்கிகளின் மொத்த செயல்பாட்டு லாபம் சுமார் 11,10,913 கோடி ரூபாயாக இருக்கும் நிலையில் பெருநிறுவனங்களின் வராக்கடன் தள்ளுபடிகளுக்காக ஒதுக்கப்பட்ட தொகை மட்டும் சுமார் 12,38,346 கோடி ரூபாயாகும்.

இவ்வாறு அரசிற்கு வரவேண்டிய லட்சக்கணக்கான கோடி ரூபாய் வராக்கடன் தள்ளுபடி என்ற பெயரில் ஒரு சில பெரு முதலாளிகளின் பைகளுக்கு மடைமாற்றப்படுவதால் ஒரு மிகப்பெரிய வருவாய் இழப்பு ஏற்படுகின்றது. இந்த வருவாய் இழப்பு பெட்ரோல், டீசல் மீதான வரி உயர்வு, அத்தியாவசிய பொருட்களின் மீதான விலைவாசி உயர்வு போன்ற பிற வழிகளில் சாமானிய மக்களின் மீது சுமத்தப்பட்டு ஈடு செய்யப்படுகின்றது. இவ்வாறு சாமானிய மக்களின் வங்கிச்சேமிப்பை வராக்கடன் தள்ளுபடிகளின் மூலம் மொத்தமாக வாரிச்சுருட்டும் கார்பரேட் பெருநிறுவனங்களின் கைகளிலேயே அந்த வங்கிகளையும் ஒப்படைத்துவிடத் துடிக்கிறது இந்த அரசாங்கம். இதன் மூலம் ஒரு கார்ப்பரேட் நிறுவனம் பொதுத்துறை வங்கியில் தான் வாங்கிய கடனையும் திருப்பிச் செலுத்தாமல் அந்த வங்கியையும் கைப்பற்றிக்கொள்ளக் கூடிய வகையிலான கூட்டுக்களவாணி முதலாளித்துவத்திற்கே (Crony capitalism) இந்த அரசாங்கம் துணை போகிறது என்பது தெளிவாகிறது.

மேலும் காலம்தோறும் தனியார் வங்கிகள் என்பவை நம்பகத்தன்மை அற்றதாகவும், பாதுகாப்பற்றதாகவுமே இருந்து வந்துள்ளன. வங்கிகள் தேசியவுடமையாக்கப்பட்ட 1969க்கு பிறகு சுமார் 24 தனியார் வங்கிகள் திவால் நிலைக்குச் சென்று பொதுத்துறை வங்கிகளோடு இணைக்கப்பட்டுள்ளன. இவ்வாறு தனியார் வங்களின் நட்டத்தையும் பொதுத்துறை வங்கிகள் தாங்கிக் கொண்டதாலேயே அவ்வங்கிகளின் வாடிக்கையாளர்களின் பல கோடி ரூபாய் சேமிப்புகள் காப்பற்றப்பட்டன. இப்போதும் தொடர்ச்சியாக டிஎச்எப்எல் (DHFL), யெஸ் வங்கி, லட்சுமி விலாஸ் வங்கி, ஐசிஐசிஐ என்று தனியார் வங்கிகளின் நிர்வாகத் தோல்விகள் தொடர்கின்றன. எனவே பொதுத்துறை வங்கிகள் மட்டுமே மக்களின் சேமிப்பிற்கு பாதுகாப்பானதாகவும், நம்பகத்தன்மை வாய்ந்ததாகவும் இருக்கும் என்பது உள்ளங்கை நெல்லிக்கனி.

மேலும் அரசின் இந்த அறிவிப்பால் பொதுத்துறை வங்கிகளின் நலனில் முக்கிய அக்கறை கொண்டவர்களான (Stakeholders) வாடிக்கையாளர்களுக்கோ, ஊழியர்களுக்கோ அல்லது அவற்றின் முக்கிய பங்குதாரரான அரசாங்கத்திற்கோ எந்த ஒரு நன்மையும் கிடைக்கப் போவதில்லை என்பது மறுக்கப்பட முடியாத உண்மை. ●

கட்டுரை

# செவிலியர்களின் தேவை சலுகைகள் அல்ல, உரிமைகள்

- இ.மைக்கேல் லில்லி புஷ்பம்

**மே 12,உலக செவிலியர்கள் தினம்**

செவிலியர்கள் மருத்துவத் துறையின் உயிர் நாடி என்பதில் எள்ளளவும் ஐயமில்லை. நோயாளிகளின் நலனுக்காக, உணர்வுப்பூர்வமான பராமரிப்பு வழங்கும் இத்துறையில் இருப்பவர்கள் மிகவும் மதிக்கப்படத் தக்கவர்கள். அவர்கள் தங்கள் சேவைக்கான கைம்மாறு பெற உரிடையுடையவர்கள். எனவே “சலுகைகள் வேண்டாம், உரிமைகள் போதும்” என்பதே இன்றைய செவிலியர்களின் உணர்வுப்பூர்வமான கோரிக்கையாகும். செவிலியர்களின் சேவையை பெருமளவு பயன்படுத்தும் அரசாங்கமும் தனியார் மருத்துவமனைகளும் செவிலியர்களின் நியாயமான உரிமைகளை வழங்குவதில்லை என்பதே இன்றைய அவல நிலை. செவிலியருக்குரிய அடிப்படை உரிமைகளைக் கூட அரசாங்கமும் தனியார் மருத்துவ மனைகளும் சலுகைகள் என்றே கருதுவதால் அவற்றை கெஞ்சிக் கேட்டும் பெற்றுக் கொள்ள முடியாத நிலையில் தான் பல செவிலியர்கள் இருக்கின்றனர். உண்மையான நிரந்தரப் பணியும், உரிய ஊதியமும், ஓய்வூதிய திட்டங்களும், சரியான பணிநேர கட்டுப்பாடுகளும், பாதுகாப்பான பணிச்சூழலும் இவர்கள் தங்கள் உரிமைகளாகப் பெற்றிருக்க வேண்டிய நிலையில் இவையனைத்தும் தற்காலிக சலுகைகளாகவே வழங்கப்படுகின்றன.

“Human rights are not a privilege conferred by government. They are every human being’s entitlement.” - Mother Teresa

ICU, Operation Theatre, Dialysis, Emergency, Cardiac Care போன்ற முக்கிய பிரிவுகளில் பணியாற்றும் இன்றைய செவிலியர்கள் நவீன மருத்துவ நுட்பங்களில் பயிற்சி பெற்றவர்களாக இருக்க வேண்டியக கட்டாயத்திலிருக்கிறார்கள். ஒளிமயமான எதிர்காலத்தை நோக்கிய இந்தியாவில், இவ்வாறு பல அரிய பயிற்சிகளைப் பெற்ற செவிலியர்கள், நோயாளிகளுக்கு தரமான மருத்துவ சேவையை வழங்க, முழு உரிமையுடனும் சுயமரியாதையுடனும் பணியாற்றும் சூழல் கட்டாயமாக தேவைப்படுகிறது. சலுகைகளுக்குப் பதிலாக உரிமைகளை நிலைநாட்டுவதே ஒரு நாகரிகச் சமூகத்தின் கடமையாகும்.

நிகழும் ஆண்டான 2025 ஆம் ஆண்டில் இந்தியாவில் மட்டும் 3.3 மில்லியன் (33 லட்சம்) செவிலியர்கள் பணியாற்றுகிறார்கள். ஆனால், WHO தரவின் அடிப்படையில் ஒரு மருத்துவமனையில் நோயாளி மற்றும் செவிலியர் விகிதம் குறைவாகவே உள்ளது. அதாவது 1:4 என்பதற்குப் பதிலாக 1:8 மற்றும் இன்னும் குறைவாகவே உள்ளது. செவிலியர்கள் எண்ணிக்கை குறைந்து நோயாளிகளின் எண்ணிக்கை அதிகமாகும் போது அங்கு செவிலியத்தின் தரமும் குறைகிறது. எனவே பொது மக்களின் நலன் கருதினால் செவிலியர்கள் எண்ணிக்கையை அதிகரிக்க வேண்டிய கட்டாயத்தில் நம் அரசு உள்ளது. இன்று ஆண்களும் மிக அதிக அளவில் செவிலியத் துறையில் பணியாற்றுவதால் செவிலியத் துறை ஒரு இனம் சார்ந்த சேவையாக இல்லாமல் மருத்துவத் தொழில்நுட்ப வளர்ச்சியுடன், விரிந்த பரிணாமம் கொண்ட பணியாக வளர்ந்துள்ளது. செவிலியம் சார்ந்த உயர்கல்வி மருத்துவ கல்விக்கழகங்கள் மற்றும் பல்கலைக்கழகங்களில் வழங்கப்பட்டு,

உயர்ந்த தரம் மற்றும் உயர்ந்த தொழில்நுட்ப நிபுணத்துவத்தை அளிக்கின்றன. உலகளவில் செவிலியர்களுக்கான தேவை 2030க்குள் 60 லட்சம் வரை அதிகரிக்கலாம் என்பது WHO ன் ஒரு கணிப்பீடு. [WHO, State of the World's Nursing 2020 Report] இந்த தேவையை நம் நாட்டில் பூர்த்தி செய்யும் சாத்தியக் கூறு தற்போதைய நிலையில் மிகவும் குறைவானதாகக் காணப்படுகின்றது.

வளர்ந்த நாடுகளில் செவிலியர்களுக்கு வழங்கப்படும் சலுகைகள், ஊதியம் மற்றும் பாதுகாப்பான சூழல் ஆகியவை நாட்டிற்கு நாடு வேறுபடுகின்றது. எடுத்துக்காட்டாக,

- அமெரிக்காவில் ஒரு RN (Registered Nurse) ன் ஆண்டு சராசரி ஊதியம் $77,000 (USD) ஆகும்.
- கனடாவில் செவிலியர்கள் சங்க உறுப்பினராக இருப்பதன் மூலம் அவர்களுக்கு தொழிலாளர் உரிமைகள் மற்றும் பாதுகாப்புகள் உறுதி செய்யப்படுகின்றன.
- ஐரோப்பிய நாடுகளில், குறிப்பாக நார்வே, ஜெர்மனி மற்றும் ஸ்விட்சர்லாந்து ஆகிய நாடுகளில் செவிலியர்களுக்கு வேலைநிறைவு, பணி நேர கட்டுப்பாடு மற்றும் தொழில்நுட்ப பயிற்சிகள் சிறப்பாக வழங்கப்படுகின்றன.
- ஜப்பானில் முதிர்வயதுடைய மக்கள் எண்ணிக்கை அதிகமாவதால், செவிலியர்களின் தேவை அதிகரித்துள்ளதால் அரசு புதிய பயிற்சித் திட்டங்களை தொடங்கியுள்ளது.

இந்தத் தரவுகள், இந்தியாவும் நாட்டின் எதிர்கால தேவைகளை அடிப்படையாகக் கொண்டு செவிலியத் துறையில் வளர்ச்சிகளை உருவாக்க வேண்டிய அவசியத்தை எடுத்துக்காட்டுகிறது. எதிர்காலத் தேவைகளான உயர் தொழில்நுட்பம் வாய்ந்த மருத்துவப் பணிகளுக்கு தகுதியான செவிலியர்களின் தேவை இந்தியாவிலும் அதிகரித்துக் கொண்டிருக்கிறது, இதை பூர்த்தி செய்வதில் அரசு கவனம் செலுத்தினால் மட்டுமே நாட்டில் மக்கள் நலன் குறைந்த பட்ச அளவிலாவது பூர்த்தி செய்யப்படும்.

இயற்கை பேரழிவுகளில் செவிலியர்கள் பணி ஈடு செய்ய இயலாததாகும். குறிப்பாக கோவிட் பெருந்தொற்றுக் காலம், செவிலியர் சேவையை உலகம் தாகத்தோடு உற்று நோக்கிய காலமாகும். செவிலியர்கள், மருத்துவ மனைகள் அல்லது கிராமப் புற 24 மணி நேர சுகாதார நிலையங்கள் மற்றும் அரசின் சுகாதாரத் திட்டங்களான மக்களை தேடி மருத்துவம் ஆகியவற்றில் பணிபுரிவது மட்டுமில்லாது அரசின் சுகாதாரத் துறை முன்னேற்றத்தில் பெரும் பங்கு வகிக்கின்றனர். மக்களைத் தேடி மருத்துவம் மூலம் நாடு முழுவதும் உயர் இரத்த அழுத்தம், நீரழிவு நோய் உள்ளவர்கள் கண்டறியப் பட்டு 2023 - 24 ம் ஆண்டில் 32% லிருந்து 47% ஆக பயனாளர்கள் எண்ணிக்கை அதிகரித்துள்ளது. இது மட்டுமில்லாது செவிலியர்களின் தன்னலமற்ற மகத்தான பணியினால் மகப்பேறு இறப்பு விகிதம் (MMR) மற்றும் பச்சிளம் குழந்தை இறப்பு விகிதம் (IMR) போன்றவை மிகப் பெரிய அளவில் குறைந்துள்ளது. IMR 8.2% லிருந்து 7.7% ஆகவும் MMR 45.5% லிருந்து 39.4% ஆகவும் குறைந்துள்ளது என்பது செவிலியப் பணிக்கு கிடைத்த மணிமகுடம் ஆகும்.

*"To do what nobody else will do, a way that nobody else can do, in spite of all we go through... that is what it is to be a nurse." - Rawsi Williams.*

நவீன கால மருத்துவ சேவையில் டிஜிட்டல் ஹெல்த் ரெக்கார்டுகள், டெலிமெடிசின், ரோபோட் உதவியுடன் நடக்கும் அறுவை சிகிச்சைகள் போன்றவை நடைமுறைப்படுத்தப் பட்டுக் கொண்டிருக்கின்ற வேளையில் செவிலியர்களும் இதற்கேற்ப தங்கள் தொழில்நுட்ப பயிற்சிகளை மேம்படுத்த வேண்டிய கட்டாயத்திலிருக்கின்றார்கள்.

இதற்காக அரசாங்கம் மற்றும் தனியார் மருத்துவக் கல்வி நிறுவனங்கள் இணைந்து பயிற்சி மையங்களை உருவாக்க வேண்டும். இதன் மூலமே செவிலியச் சேவை உலகளாவிய வளர்ச்சியை அடைய முடியும். ஒரு சமூகத்தின் ஆரோக்கியம், அதன் செவிலியர்களின் செயல்பாட்டை பொருத்தே அமைகின்றது. கிராமங்கள் முதல் நகரங்கள் வரை, மக்கள் நலனுக்காக பணியாற்றும் செவிலியர்கள், ஊரக மருத்துவத்தில் முக்கிய பங்கு வகிக்கின்றனர். தாய்மையுடன் கூடிய மனசாட்சியும், சேவையை மீறாத ஒழுக்கமும் கொண்ட இத்துறையை தேர்ந்தெடுக்க மாணவர்கள் முன்வர வேண்டும். ஏனென்றால் செவிலியச் சேவை என்பது லாபம் நோக்கிய தொழில் அல்ல மாறாக பிறர்நலன் சார்ந்த பணியும், சமுதாய நலனுக்கான அத்தியாவசிய பங்கும் ஆகும்.

தமிழ்நாட்டில் சுமார் 1.5 லட்சம் செவிலியர்கள் அரசு மற்றும் தனியார் துறைகளில் பணியாற்றுகிறார்கள். அரசாங்கப் பணியில் பெரும்பாலானோர் MRB (Medical Recruitment Board) வாயிலாக ஒப்பந்த அடிப்படையில் நியமிக்கப்பட்டுள்ளனர். அரசு மருத்துவமனைகளில் முக்கிய பங்காற்றும் செவிலியர்கள் குறைந்த ஊதியம் மற்றும் நிரந்தரமான பணி இல்லாமல் வாழ்நிலை சவால்களை எதிர்கொள்கிறார்கள். தனியார் மருத்துவமனைகளின் எண்ணிக்கையை ஊக்குவிக்கும் அரசு, செவிலியர்களுக்கானப் புதிய பணியிடங்களை நிரப்புவதற்கான நடவடிக்கைகளை கண்டுகொள்ளாதது வேதனைக்குரிய செயலாகும். நோயாளிகளின் நலன் கருதி புதிய பணியிடங்களை உருவாக்க அரசு ஆவன செய்ய வேண்டும்.

MRB செவிலியர் மேம்பாட்டு சங்கம் இதற்கான கோரிக்கைகளை தொடர்ந்து வலியுறுத்தி வரும் நிலையில் ஒப்பந்த அடிப்படையிலான நியமனங்களை குறைத்து நிரந்தர பணி நியமனங்களை அரசு உறுதிப் படுத்தினால் செவிலியத் துறையின் சேவை உயரிய நிலையை அடையும் என்பதில் எவ்வித ஐயமுமில்லை. பணியில் பாதுகாப்பற்ற சூழ்நிலை மற்றும் அதிகப் படியான பணிச்சுமை போன்றவற்றை களைவதும் அரசின் மிக முக்கியமான கடமை ஆகும்.

அரசு ஊழியர் சங்கம் MRB செவிலியர்களின் அனைத்து விதமான தொடர் போராட்டங்களிலும் மிக முக்கிய பங்கு வகிப்பதுடன் அதனை வழி நடத்தி செல்லும் பணியையும் மேற்கொண்டு வருகிறது. 2017 ல் நடைபெற்ற MRB செவிலியர்களின் போராட்டகளின் வரலாற்றை யாராலும் மறக்க முடியாது.

இன்று உலக அளவில் மே மாதம் 12 ந் தேதியை செவிலியர் தினமாக கொண்டாடி வரும் வேளையில் செவிலியர்கள் அனைவருக்கும் இது மகிழ்ச்சி கொடுத்தால் செவிலியர்கள் கனவு நனவாகும்.

இந்த மகிழ்ச்சி சம்பளத்தில் மட்டும் வருவதில்லை, பணியிட பாதுகாப்பு, மன உளைச்சல் இல்லாத பணி சூழ்நிலை, தகுந்த பணி உயர்வு இவற்றையும் உள்ளடக்கியதாகும்.

“என்று தீரும் இந்த சுதந்திர தாகம்!” என்ற பாரதியின் வரிகள் செவிலியர்களின் மனக் குமுறல்கள் மாற்றம் காண அரசு மற்றும் தனியார் மருத்துவமனைகளும் செவிலியர்களுடைய நியாயமான கோரிக்கைகளை நிறைவேற்றி பணப் பாதுகாப்பு மற்றும் பணியிடப் பாதுகாப்பை உறுதி செய்தால் மட்டுமே செவிலியம் மக்கள் சேவையில் நிறைவைப் பெற்று அதன் வளர்ச்சியை நோக்கி செல்லும்.

கோரிக்கைகள் நிறைவேறும் அந்த தருணம் உண்மையான செவிலியர் தினமாக அமையும் என்ற நம்பிக்கை ஒவ்வொரு செவிலியர் மனதிலும் இருந்து வருகிறது.

*“We need to invest in nurses with rights, recognition and resources.” - ICN (International Council of Nurses)* ●

# பணி நிறைவு பாராட்டு விழா




பணி நிறைவு பாராட்டு விழா தமிழ்நாடு நெடுஞ்சாலை துறை சாலை பணியாளர் சங்கத் தாராபுரம் கோட்டம் உடுமலைப்பேட்டை உட்கோட்டம் சாலைப் பணியாளர் தோழர் ஆர் தங்கவேல் அவர்களின் பணி நிறைவு பாராட்டு விழா நெடுஞ்சாலைத்துறை அலுவலகம் உடுமலைப்பேட்டையில் உட்கோட்ட தலைவர் ஆர் ஜெகதீஸ்வரன் தலைமையில் நடைபெற்றது அந்த நிகழ்வில் துறை வாரி சங்கத் தோழர்கள் தோழர் ஆனந்தி தமிழ்நாடு அரசு ஊழியர் சங்கத்தின் மடத்துக்குள்ள வட்ட தலைவர் தோழர் சிவக்குமார் உடுமலைப்பேட்டை வட்ட தலைவர் தோழர் மார்க்கண்டையன் தோழர் எஸ் தங்க பாண்டியன் நெடுஞ்சாலைத்துறை சாலை பணியாளர், தமிழ்நாடு அரசு ஊழியர் சங்கத்தின் உடுமலை கோட்டை செயலாளர் தோழர் கே செல்லமுத்து சங்கத்தின் மாவட்ட துணை செயலாளர் எஸ் முருகசாமி, மருத்துவமனை பணியாளர் தோழர் முருகவேல் கலந்து கொண்டு வாழ்த்துரை வழங்கிட நிறைவாக தமிழ்நாடு நெடுஞ்சாலை துறை சாலை பணியாளர் சங்கத்தின் மாநில தலைவர் மா.பாலசுப்பிரமணியன் தோழரை வாழ்த்தி மற்றும் நிறைவுரையாற்றினார் ஓய்வு பெற்ற தோழர் தங்கவேல் ஏற்புரை இயக்க கோட்டச் செயலாளர் தோழர் ஜி மாரிமுத்து நன்றியுரை கூற நிகழ்ச்சி இனிதே நடைபெற்றது.

தமிழ்நாடு அரசு ஊழியர் சங்க விழுப்புரம் மாவட்ட துணை தலைவரும் தமிழ்நாடு அரசு கண் மருத்துவர் உதவியாளர் சங்க மாநில பொருளாளருமான தோழர் க அன்பழகன் அவர்களின் பணி நிறைவு பாராட்டு விழா திருக்கோவிலூர் ஆண்டவர் மஹாலில் மாவட்டத் தலைவர் தோழர் சரவணன் தலைமையில் சிறப்பாக நடைபெற்றது

இந்த நிகழ்வில் தமிழ்நாடு அரசு ஊழியர் சங்க மாவட்ட செயலாளர் ராஜ்குமார் பொருளாளர் சாருமதி உள்ளிட்ட மாவட்ட நிர்வாகிகள் வட்டக் கிளை நிர்வாகிகள் தோழமைச் சங்க நிர்வாகிகள் கலந்து கொண்டு தோழரின் பணி நிறைவு காலம் சிறப்பாக இருக்க வாழ்த்துக்கள் தெரிவித்தனர் தமிழ்நாடு அரசு ஊழியர் சங்க திண்டுக்கல் மாவட்ட




துணைத் தலைவரும் தமிழ்நாடு கூட்டுறவுத்துறை ஊழியர் சங்கத்தின் முன்னாள் மாநில செயலாளர் தோழர் பிச்சை வேலு அவர்களின் பணி நிறைவு பாராட்டு விழா கரூர் மாவட்ட இணை பதிவாளர் அலுவலகத்தில் சிறப்பாக நடைபெற்றது இதில் தமிழ்நாடு அரசு ஊழியர் சங்க மாவட்ட நிர்வாகிகள் வட்டக்கிளை நிர்வாகிகள் தோழமைச் சங்க நிர்வாகிகள் கலந்து கொண்டு தோழரின் பணி நிறைவு காலத்தை வாழ்த்தி சங்கப் பணியாற்றிய நிகழ்வுகளை நினைவு கூர்ந்து வாழ்த்துக்கள் தெரிவித்தனர்



திருப்பூர் மாவட்டத்தில் தமிழ்நாடு கிராம சுகாதார செவிலியர் சங்கத்தின் மாவட்ட தலைவராகவும் மாநில துணைத்தலைவராகவும் தமிழ்நாடு பகுதி கிராம சுகாதார செவிலியர் சங்கத்தின் மாநில துணைத்தலைவராக இயக்க பொறுப்புகளிலேயே பணியாற்றிய தமிழ்நாடு அரசு ஊழியர் சங்கத்தின் திருப்பூர் தெற்கு வட்டக்கிளை பொருளாளராக, செயலாளராகவும், தலைவராகவும் திறம்பட செயலாற்றிய தோழர் ராணி அவர்களினுடைய பணி நிறைவு பாராட்டு விழா மாவட்டத் தலைவர் தலைமையில் சிறப்பாக நடைபெற்றது இதில் மாவட்ட செயலாளர் பாலசுப்பிரமணியன் தமிழ்நாடு அரசு ஊழியர் சங்க மாநிலத் துணைப் தலைவர் ஆ.அம்சராஜ் கலந்துகொண்டு வாழ்த்துரை வழங்கினார்கள் திருப்பூர் மாவட்டத்தில் 31 ஆண்டுகாலம் அரசு பணியில் சிறப்பாக சேவையை செய்தது மட்டுமல்லாமல் இயக்கப் பணியிலும் முழுமையாக கலந்து கொண்டு திறம்பட செயல்பட்ட தோழருடைய சங்கப் பணியை பாராட்டி மாவட்ட மையத்தின் சார்பாக நினைவு பரிசு வழங்கப்பட்டது. ●

# மாவட்ட தலைநகர்
# ஜாக்டோ - ஜியோ பேரணி - 22.04.2025

### திண்டுக்கல்

ஜாக்டோ ஜியோ சார்பாக திண்டுக்கல்லில் நடைபெற்ற பேரணி ஊராட்சி ஒன்றிய அலுவலகம் முன்பிருந்த புறப்பட்டு பூ மார்க்கெட் அண்ணா சிலை வடக்கு காவல் நிலையம் வழியாக நெடுஞ்சாலைத்துறை உதவி கோட்ட பொறியாளர் அலுவலகம் முன்பாக முடிவுற்றது இப் பேரணிக்கு மாவட்ட ஒருங்கிணைப்பாளர்கள் முபாரக் அலி, முருகன் ,ஆர்தர் ,ஜெசி ,ராஜா கிளி, ஜோசப் சேவியர் ஆகியோர் தலைமை தாங்கினார் பேரணியில் உயர்மட்ட குழு உறுப்பினர்கள் முருகானந்தம் ராஜ்குமார் பேட்ரிக் ரைமண்ட் ஆகியோர் பேசினர் நிறைவாக மாநில ஒருங்கிணைப்பாளர் வின்சென்ட் பால்ராஜ் சிறப்புரையாற்றினார் பேரணியில் ஆசிரியர்கள் அரசு ஊழியர்கள் என பெருமளவில் பங்கேற்றனர்

### சேலம்

ஜாக்டோ ஜியோ பேரமைப்பின் மாநிலம் முழுவதும் நடைபெற்ற மாவட்ட தலைநகரில் பேரணி சேலம் மாவட்டத்தில் நடைபெற்றது பேரணிக்கு மாவட்ட ஒருங்கிணைப்பாளர்கள ஜாக்டோ அமைப்பின் சார்பில் திருமுருகவேல் கோவிந்தன் சங்கர் ஜியோ அமைப்பின் சார்பில் திருவரங்கன் சுரேஷ் ஆகிய தோழர்கள் தலைமை ஏற்றனர் மாநில ஒருங்கிணைப்பாளர் பிரபாகரன் பேரணியை துவக்கி வைத்தார் பேரணியில் ஆசிரியர்கள் அரசு ஊழியர்கள் என பெருமளவில் பங்கேற்றனர்

### மதுரை

22.04.2025 செவ்வாய் கிழமை மாலை உலக தமிழ்ச்சங்கம் முதல் மாவட்ட ஆட்சியர் அலுவலகம் வரை தமிழக முதல்வரின் தேர்தல்கால வாக்குறுதிகளை நிறைவேற்ற வலியுறுத்தி நடைபெற்ற பேரணியில் அரசு ஊழியர்கள் - ஆசிரியர்கள் - அரசு பணியாளர்கள் ஆயிரத்துக்கும் மேற்பட்டோர் கலந்து கொண்டனர். மாவட்ட ஒருங்கிணைப்பாளர்கள் க.சந்திரபோஸ்.பா.பாண்டி,வி.ச.நவநீதகிருஷ்ணன்,மு.பொற்செல்வன் அ.ஜோயல்ராஜ் தலைமை ஏற்றனர். எம்.பி.முருகையன் மாநில ஒருங்கிணைப்பாளர் சிறப்புரையாற்றி கோரிக்கை பேரணியை துவக்கி வைத்தவர்.

முன்னாள் மாநில ஒருங்கிணைப்பாளர் ஆ.செல்வம் சிறப்புரையாற்றினார். முன்னாள் மாநில ஒருங்கிணைப்பாளர் K.P.O.சுரேஷ் நிறைவுரையாற்றினார். மாவட்ட ஒருங்கிணைப்பாளர் இரா.தமிழ் நன்றியுரையாற்றினார். பேரணியில் ஆசிரியர்கள் அரசு ஊழியர்கள் என பெருமளவில் பங்கேற்றனர்.

### திருவாரூர்

திருவாரூர் மாவட்டம் ஜாக்டோ ஜியோ சார்பாக பத்தாம் கோரிக்கைகளை வலியுறுத்தி திருவாரூர் ரயில்வே நிலையத்தில் இருந்து மனுநீதிச் சோழன் பூங்கா வரை மாவட்ட ஒருங்கிணைப்பாளர்கள் தோழர் சுதாகர், முத்துவேல், சண்முகவடிவேல், மணிமாறன், பூபதி தலைமையில் பேரணி நடைபெற்றது.

இந்த நிகழ்வை ஜாக்டோ ஜியோ உயர்மட்ட குழு உறுப்பினர் பெ.ரா.ரவி அவர்கள் துவங்கி வைத்தார்.

தமிழ்நாடு அரசு ஊழியர் சங்க மாநிலச் செயலாளர் செ. பிரகாஷ் கோரிக்கை விளக்க உரையாற்றினார் வழங்கினர். கோரிக்கை முழக்கமிட்டு திருவாரூர் வீதியில் சென்று இந்தப் பேரணியில் ஏராளமான ஆசிரியர்கள் அரசு ஊழியர்கள் கலந்து கொண்டனர் நிறைவாக உயர்மட்ட குழு உறுப்பினர் ஆசிரியர் துரைராஜ் ஆசிரியர் முரளி வாழ்த்துரை வழங்கினர் தமிழ்நாடு அரசு ஊழியர் சங்க மாநில துணைப் பொதுச் செயலாளர் வெ. சோமசுந்தரம் நிறைவுறையாற்றி பேரணியை நிறைவு செய்தார் கல்லூரி ஆசிரியர் கழகத்தின் சார்பாக மண்டல செயலாளர் ராஜாராமன் நன்றியுரை கூறினார்.

### நாகப்பட்டினம்

நாகப்பட்டினம் மாவட்டத்தில் ஜாக்டோ ஜியோ சார்பாக கோட்டாட்சியர் அலுவலகம் முதல் புதிய பேருந்து நிலையம் வரை மாவட்ட ஒருங்கிணைப்பாளர்கள் அ.அற்புதராஜ் ரூஸ்வெல்ட், சரவணன், முத்துசாமி தலைமையில் பேரணி சிறப்பாக நடைபெற்றது இந்த நிகழ்வில்

மாநில உயர்மட்ட குழு உறுப்பினர் அ.தி. அன்பழகன் கோரிக்கை விளக்க உரையாற்றினார் இதில் ஆசிரியர்கள் அரசு ஊழியர்கள் என 350 க்கும் மேற்பட்ட ஊழியர்கள் பங்கேற்று கோரிக்கை முழக்கமிட்டு பேரணியில் சென்றனர்

### பெரம்பலூர்

பெரம்பலூர் மாவட்டத்தில் ஜாக்டோ ஜியோ சார்பாக ரோவர் வளைவு முதல் பாலக்கரை வரை 10 அம்ச கோரிக்கைகளில் வலியுறுத்தி மாவட்ட தலைமை ஒருங்கிணைப்பாளர் குமரி அனந்தன் தலைமையில் கோரிக்கை பேரணி மிகச் சிறப்பாக நடைபெற்றது இதில் அரசு ஊழியர்கள் ஆசிரியர்கள் என திரளாக பங்கேற்று பத்து அம்ச கோரிக்கைகளை வலியுறுத்தி கோரிக்கை முழக்கமிட்டு வீதியில் பேரணியாக சென்றனர்

### தஞ்சாவூர்

தஞ்சாவூர் மாவட்டம் ஜாக்டோ ஜியோ சார்பாக தமிழக முதலமைச்சரின் கவனத்தை ஈர்க்கும் பொருட்டு கோரிக்கை முழக்கமிட்டு சிவகங்கை பூங்கா முதல் பனகல் கட்டிடம் வரை மாவட்ட ஒருங்கிணைப்பாளர் சி.பன்னீர்செல்வம் தலைமையில் பேரணி நடைபெற்றது மாநில உயர்மட்ட குழு உறுப்பினர் அ.எழிலரசன் பேரணியை துவங்கி வைத்து துவக்வுரையாற்றினார் உயர்மட்ட குழு உறுப்பினர் தோழர் பெ அம்பேத்கார் சிறப்புரையாற்றினார் அரசு ஊழியர்கள் ஆசிரியர்கள் என திரளாக கலந்து கொண்டு இந்த பேரணியில் வீதியில் கோரிக்கை முழக்கமிட்டு வந்தனர் தமிழ்நாடு அரசு ஊழியர் சங்க துணை த்தலைவர் மற்றும் உயர்மட்ட குழு உறுப்பினர் அ. ரங்கசாமி நிறைவுறை ஆற்றினர் மாவட்ட ஒருங்கிணைப்பாளர் மற்றும் தமிழ்நாடு அரசு ஊழியர் சங்க மாவட்ட செயலாளர் இரா.ரமேஷ் நன்றி உரை கூற பேரணி நிறைவு பெற்றது.

### புதுக்கோட்டை

புதுக்கோட்டை மாவட்டம் ஜாக்டோ ஜியோ வின் சார்பாக பழைய பேருந்து நிலையத்தில் பேரணி துவங்கி புதுக்கோட்டை வீதிகளில் 10 அம்ச கோரிக்கை வலியுறுத்தி ஆசிரியர்கள் மற்றும் அரசு ஊழியர்கள் திரளானவர் கலந்துகொண்டு இந்த பேரணி மாவட்ட ஒருங்கிணைப்பாளர்கள் தோழர் ரங்கசாமி ஜோதிமணி தலைமையில் நடைபெற்றது. இந்த நிகழ்வை மாநில ஒருங்கிணைப்பாளர் ஆசிரியர் மன்றம் சண்முகநாதன் துவங்கி வைத்தார் அரசு ஊழியர் சங்கம் மாவட்ட தலைவர் ஜபருல்லா வாழ்த்துரை வழங்கினார். மாநில ஒருங்கிணைப்பாளர் தோழர் மலர்விழி கோரிக்கை பேரணியை நிறைவு செய்து நிறைவுரையாற்றினார் நிறைவாக மாவட்ட ஒருங்கிணைப்பாளர் தோழர் ராஜாங்கம் நன்றியுரை கூற பேரணி நிறைவு பெற்றது

### மயிலாடுதுறை

ஜாக்டோ ஜியோ ஒருங்கிணைப்பாளர்கள் கூட்டத்தில் எடுக்கப்பட்ட முடிவின் அடிப்படையில் 22.04.2025 மாவட்டத் தலைநகர் பேரணி மயிலாடுதுறை TELC பள்ளியிலிருந்து துவங்கி வட்டாட்சியர் அலுவலகம் வரை நடைபெற்றது. பேரணியை மாவட்ட ஒருங்கிணைப்பாளர் தோழர் S.சண்முகசுந்தரம் கொடியசைத்து துவக்கி வைத்தார். மாவட்ட ஒருங்கிணைப்பாளர்கள் தோழர் D.இளவரசன், R.செல்வம், U.அன்பரசன் மற்றும் T.ஆதீஸ்வரன் ஆகியோரின் கூட்டுத் தலைமையில் ஆசிரியர்களும், அரசு ஊழியர்களும் அணிவகுத்து மாண்புமிகு தமிழக முதல்வர் தேர்தல் வாக்குறுதிகளை நடப்பு சட்டமன்ற கூட்டத் தொடரில் நிறைவேற்றிட வலியுறுத்தி 350 மேற்பட்ட அரசு ஊழியர்கள் முழக்கமிட்டு பேரணியாக சென்றனர்.

### அரியலூர்

அரியலூர் மாவட்டத்தில் காவல்துறை அனுமதி மறுப்பு காரணமாக ஜாக்டோ ஜியோ சார்பில் அரியலூர் அண்ணா சிலை அருகே ஆர்ப்பாட்டமாக நடத்தப்பட்டது. இந்த ஆர்ப்பாட்டத்தில் 298 அரசு ஊழியர்கள் ஆசிரியர்கள் முன்னணி நிர்வாகிகள் கலந்து கொண்டு கோரிக்கை வலியுறுத்தி வலுவான கோஷமிட்டனர். தமிழ்நாடு அரசு ஊழியர் சங்கம் மாவட்ட தலைவர் தோழர் என். வேல்முருகன் கண்டன உரையாற்றினார்ஒ. கருணாநிதிமாவட்ட செயலாளர்,தமிழக ஆசிரியர் கூட்டணி. கோரிக்கை உரை நிகழ்த்தினார்.

### தேனி

JACCTO GEO பேரணி தேனி மாவட்டத்தில் தேனி மதுரை சாலை, மீனாட்சியம்மன் கோவில் அருகில் துவங்கி தேனி பங்களாமேடு முடிய பேரணி நடைபெற்றது. மாநில தலைவர், தமிழக

தமிழாசிரியர் கழகம் தோழர் கு. சரவணன், துவங்கி வைத்தார் இந்திய தொழிற்சங்க மையம்.மாவட்ட செயலாளர் தோழர் எம். இராமச்சந்திரன் நிறைவுரையாற்றினார். இப்பேரணியில் ஆசிரியர்கள் 326 பேரும் அரசு ஊழியர்கள் 105 பேரும் மொத்தம் 431 நபர்கள் கலந்து கொண்டுள்ளார்கள்

### கரூர்

கரூர் மாவட்டம் ஜாக்டோ ஜியோவின் சார்பாக நிலுவையில் உள்ள கோரிக்கையை வலியுறுத்தி லைட்ஹவுஸ் கார்னர் பகுதியில் இருந்து கரூர் மாநகராட்சி அலுவலகம் வரை கோரிக்கை பேரணி மாவட்ட ஒருங்கிணைப்பாளர் எம். எஸ்.அன்பழகன் சு.வேலுமணி ஆகியோரின் கூட்டுத் தலைமையில் நடைபெற்றது. மாவட்ட ஒருங்கிணைப்பாளர் பா. பெரியசாமி பேரணியை துவங்கி வைத்து துவக்குறையாற்றினார் தமிழ்நாடு அரசு பணியாளர் சங்கத்தின் மாநில துணைத்தலைவர் தோழர்.செந்தில்குமார் தமிழ்நாடு உடற்கல்வி ஆசிரியர் மற்றும் இயக்குனர் சங்கத்தின் மாநில பொதுச் செயலாளர் தோழர் மா. மு.சதீஷ் ஆகியோர் கண்டன உரையாற்றினர் தமிழ்நாடு அரசு ஊழியர் சங்கத்தின் மாநிலத் துணைத் தலைவர் மு. செல்வராணி அவர்கள் பேரணியை நிறைவு செய்து நிறைவுரையாற்றினார் தமிழ்நாடு அரசு ஊழியர் சங்கத்தின் மாவட்ட செயலாளரும், ஒருங்கிணைப்பாளருமான தோழர் பொன். ஜெயராமன் நன்றி உரை கூறினார் இந்த பேரணியில் அரசு ஊழியர்கள் ஆசிரியர்கள் என 185 பெண் தோழர்கள் உட்பட 330 பேர் கோரிக்கை முழக்கமிட்டு பேரணியாக சென்றனர்

### கன்னியாகுமரி

ஜாக்டோ ஜியோ கன்னியாகுமரி மாவட்டத்தில் தமிழ்நாடு முதலமைச்சர் தேர்தல் கால வாக்குறுதிகளாக கொடுத்த கோரிக்கைகளை நிறைவேற்றி தர வேண்டும் என்று கோரிக்கையை பேரணி இடைவிடாத தீவிர கன மழையிலும் நடைபெற்றது இதில் மாவட்ட ஒருங்கிணைப்பாளர் தியாகராஜன் சந்திரசேகர் கலந்துகொண்டு கோரிக்கை விளக்க உரையாற்றினார் பேரணியில் ஆசிரியர்கள் அரசு ஊழியர்கள் என 120 பெண் தோழர்கள் உள்ளிட்ட 250 பேர் பெருந்திரளாக கலந்து கொண்டனர்

### திருப்பூர்

திருப்பூர் மாவட்டம் ஜாக்டோ ஜியோ சார்பாக கோரிக்கை வலியுறுத்தி தலைநகரில் பேரணி நடைபெற்றது இந்த பேரணியில் அரசு ஊழியர்கள் ஆசிரியர் என மொத்தம் 545 க்கு மேற்பட்ட முன்னணி ஊழியர்கள் கலந்து கொண்டனர் இந்த நிகழ்வில் மாநில ஒருங்கிணைப்பாளர் மு சீனிவாசன் பங்கேற்று சிறப்புரை நிகழ்ச்சிகள்

### திருநெல்வேலி

பத்து அம்ச கோரிக்கை வலியுறுத்தி ஜாக்டோ ஜியோ பேரமைப்பின் சார்பாக திருநெல்வேலி மாவட்ட தலைநகரில் கோரிக்கை பேரணி நடைபெற்றது இதில் அரசு ஊழியர்கள் ஆசிரியர்கள் என 360 க்கு மேற்பட்ட தோழர்கள் கலந்து கொண்டனர் மாவட்ட ஒருங்கிணைப்பாளர்கள் இந்த நிகழ்வை ஒருங்கிணைத்தல்

### தென்காசி

தென்காசி மாவட்டம் ஜாக்டோ ஜியோ வின் சார்பாக அரசு ஊழியர்கள் ஆசிரியர்கள் என 298 பேர் கலந்து கொண்ட மாபெரும் பேரணி கோரிக்கை வலியுறுத்தி மாவட்ட தலைநகரில் நடைபெற்றது

### திருப்பத்தூர்

திருப்பத்தூர் மாவட்டத்தின் சார்பாக மாவட்ட தலைநகரில் ஜாக்டோ ஜியோ வின் சார்பாக கோரிக்கை வலியுறுத்தி ஆசிரியர்கள் அரசு ஊழியர்கள் என பலரும் கலந்து கொண்டே கோரிக்கை பேரணியை மாவட்ட ஜாக்டோ ஜியோ ஒருங்கிணைப்பாளர்கள் தலைமையில் நடைபெற்றது

### திருச்சி

திருச்சிராப்பள்ளி மாவட்டத்தில் மாவட்ட ஒருங்கிணைப்பாளர்களின் தலைமையில் 500க்கும் மேற்பட்ட அரசு ஊழியர்கள் ஆசிரியர்கள் கலந்து கொண்ட கோரிக்கை பேரணி வெகு சிறப்பாக நடைபெற்றது

### மே தினவிழா பேரணி - திருப்பூர்

139ஆவது மே தினவிழா பேரணி திருப்பூர் மாவட்டம் உடுமலை நகரில் தமிழ்நாடு அரசு ஊழியர் சங்கம் உடுமலைப்பேட்டை வட்டக்கிளை சார்பில் நடைபெற்றது. ●

# துறை தேர்வு பயிற்சி வகுப்பு

தமிழ்நாடு அரசு ஊழியர்களில் துறைத்தேர்வு எழுத உள்ளவர்களுக்கு ஒரு நற்செய்தி. வருகிற மே 2025ஆம் ஆண்டு துறை தேர்வு- கணக்கு தேர்வு நடைபெற உள்ளது. இத்தேர்வுக்கு நமது ஊழியர்களுக்கு உரிய பயிற்சி வழங்க வேண்டும் என்ற உயரிய நோக்கத்தின் அடிப்படையில் கடந்த இரண்டு ஆண்டுகளாக நடத்தப்பட்டு வருகிறது. இதில் பல தோழர்கள் தேர்வு பெற்று பதவி உயர்வு பெற்றுள்ளார்கள். இந்த ஆண்டும் பயிற்சி நடத்த, தொடர்ந்து பல ஆண்டுகளாக கணக்கு தேர்வு பயிற்சி அளித்து வருகிறம, ஏற்கனவே பயிற்சி அளித்த தமிழ்நாடு அனைத்து மருந்தாளுநர் சங்கத்தின் மூத்த தோழர் திரு. தங்கத்துரை (முதன்மை மருந்து கிடங்கு மேற்பார்வையாளர் பெரம்பலூர்) அவர்கள் பயிற்சி வகுப்பு நடத்த உள்ளார்கள். தமிழ்நாடு அரசு ஊழியர் சங்கத்தின் திருச்சிராப்பள்ளி மாவட்ட மைய அலுவலகமான தோழர் எம்.ஆர்.அப்பன் இல்லத்தில்(திருச்சிராப்பள்ளி கோட்டாட்சியர் அலுவலகம் அருகில்) வைத்து கணக்குத் தேர்வுக்காக கணக்கு தேர்வு குறித்த பயிற்சி வகுப்பு வருகிற 04.05.2025 மற்றும் 11.05.2025 ஆகிய நாட்களில் காலை 10.00 முதல் மாலை 5.00 மணி வரை நடைபெற உள்ளது. துறை தேர்வு எழுத உள்ள நமது ஊழியர்கள் அனைவரும் கலந்து கொண்டு பயனடையுமாறு அன்புடன் கேட்டுக்கொள்கிறோம். மேலும் தொடர்புக்கு முனைவர் கா.பால் பாண்டி, மாவட்ட தலைவர், 7598004571 திரு. தங்கத்துரை, முதன்மை மருந்து கிடங்கு மேற்பார்வையாளர். 90035 73361

(குறிப்பு: இது முற்றிலும் இலவசம். எந்த பயிற்சி கட்டணமும் கிடையாது.) தோழமையுடன், முனைவர் கா.பால் பாண்டி, மாவட்டத் தலைவர், சோ.நவநீதன், மாவட்டச் செயலாளர், தமிழ்நாடு அரசு ஊழியர் சங்கம், திருச்சிராப்பள்ளி மாவட்டம். ●

## திண்டுக்கல் மாவட்டத்தில் TNPSC தேர்வுகளில் வெற்றி பெற்ற மாணவ மாணவியர்களுக்கான பாராட்டு விழா

திண்டுக்கல் மாவட்டத்தில் தமிழ்நாடு அரசு ஊழியர் சங்கம் தமிழ்நாடு வருவாய் துறை அலுவலர் சங்கம் இணைந்து நடத்தும் மக்களை நோக்கி பயிற்சி வகுப்பில் வெற்றி பெற்ற மாணவ மாணவியர்களுக்கான பாராட்டு விழாவில் மரியாதைக்குரிய மாவட்ட ஆட்சித் தலைவர் செ.சரவணன் திண்டுக்கல் கோட்டாட்சியர் இரா.சக்திவேல் ஆகியோர் சிறப்பு செய்தனர் தமிழ்நாடு அரசு ஊழியர் சங்க மாவட்ட தலைவர் ச.முபாரக்அலி தமிழ்நாடு வருவாய் துறை அலுவலர் சங்க மாவட்ட செயலாளர் ம.சுகந்தி அவர்கள் வாழ்த்துரை வழங்கினர்.






இவ்விழாவிற்கு தோழர் ரா.ஸ்ரீதர் அவர்கள் தலைமையேற்று நடத்தினார். பயிற்சி மைய ஆசிரியர்கள் கணேசன். தொழிலாளர் நலத்துறை பிரேம்.பாண்டி. காவல்துறை தான்யா ஊரக வளர்ச்சி துறை வில்சன். வருவாய் துறை சித்திரை செல்வி கல்வி துறை மற்றும் பல துறை ஊழியர்கள் மற்றும் 2024 ஆம் ஆண்டு Group I II group 4 தேர்வுகளில் வெற்றி பெற்று பல்வேறு அரசு துறைகளில் பணியாற்றி வரும் 56 பேர் கௌரவிக்கப்பட்டனர். மாவட்ட ஆட்சியரக கிளை செயலாளர் ராஜாமணி திண்டுக்கல் செயலாளர் முருக வள்ளி TNROA மாவட்ட இணை செயலாளர் விஜயராகவன். உள்ளிட்ட நிர்வாகிகள் பங்கேற்றனர். ●

Printed and Published by M. Anbarasu on behalf of Tamil Nadu Government Employees Association, at No.48, New No.46, Car Street, Triplicane, Chennai 600005 and Printed at Chennai Offset Printers, 19/1 & 21/2, Kithabath Khan Bhagadur Street, Ellies Road, Anna Salai, Chennai 600002, Editor: M.Baskaran Phone: 28441286
E-mail: arasuoozhiyar@gmail.com

# மாவட்ட தலைநகர்
# ஜாக்டோ - ஜியோ பேரணி - 22.04.2025




































Registered Postal Registration No. TN/CH/(C)/200/2024-2026 WPP.No.TN/PMG(CCR)/
WPP-431/2024-2026 RNI No.68584/81 Posted at Egmore RMS-1 Pathirika Channel
Date of Publication 1st Week of Every Month - Posted on 10.05.2025
























Printed and Published by M.Anbarasu on behalf of Tamil Nadu Government Employees Association at No.48, New No.46, Car Street, Triplicane, Chennai-600005 and Printed at Chennai Offset Printers, 19/1 & 21/2, Kithabath Khan Bhagadur Street, Ellies Road, Anna Salai, Chennai-600002.
Phone: 28441286 E-mail: arasuoozhiyar@gmail.com | Editor: M.Baskaran